


# யாழூர் ராகம்

கதைவாணன்

5000
17.

## இளம் எழுத்தாளர்களுக்கு கைகொடுத்தல்


இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சரான கௌரவ எஸ்.பி.திசாநாயக்க அவர்களினது வேண்டுகோளின் பிரகாரம்.

மாண்புமிகு ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களினால் ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட நிதியத்தின் கீழ் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

இந் நூலில் உள்ளடங்கியுள்ள விபரம் எழுத்தாளருக்கு உரியதாகும்.

# யாழ் ராகம்

- தொலைக்காட்சி நாடகம் -



கதைவாணன்

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | யாழூர் ராகம் |
| விடயம் | : | தொலைக்காட்சி நாடகம் |
| ஆசிரியர் | : | கதைவாணன் |
| உரிமை | : | ஆசிரியருக்கே. © |
| வெளியீடு | : | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மஹரகமை. |
| முதற்பதிப்பு | : | 1999-ஜனவரி-15 |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கம் | : | 100 |
| விலை | : | ரூ 80/- |

**ISBN 955-614-013-1**

**கலாசாலை இவற்றிற்கு**

**கருத்துடன் அர்ப்பணம் !**

யாழகத்து ஒஸ்மானியாவின்

யாழ் மீட்டும் காற்றுக்கும்

இதர யாழ்ர் கலாசாலைகளின்

இதந்தரும் மரங்களுக்கும்

புத்தளத்து சாஹிராவின்

பனிசுமந்த புல்வெளிக்கும்

இந்நூல்

அர்ப்பணம் !

# யாழூர் ராகத்தில்

## இடம் பெறும் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| கோபி | : | ஒரு மாணவன் |
| தர்மராசா | : | கோபியின் தந்தை |
| சரோஜா | : | கோபியின் தாய் |
| பாயிஸ் | : | ஒரு மாணவன் |
| அப்துல் ரஸாக் | : | பாயிஸின் தந்தை |
| ரைஹானா | : | பாயிஸின் தாய் |
| சுசீலா | : | கோபியின் சகோதரி |
| வரதராஜன் | : | கோபியின் அத்தான் |
| வேலுப்பிள்ளை | : | ஓய்வு பெற்ற ஆசிரியர் |
| றியாஸ் | : | பாயிஸின் மச்சான் |

பாயிஸினதும் கோபியினதும், நண்பர்களான
சொலமன், ரகுமான், சுஐப், துஷ்யந்தன்,
அதிபர், ஆசிரியர்கள், பியோன்

*ஆகியோராடு இன்னும் பலர்......*

# முன்னுரை

ஒரு நீண்ட இடைவெளியின் பின் எனது இரண்டாவது படைப்பு வெளிவருகின்றது. எனது இலக்கியப் பயணத்தைப் போலவே இலக்கியப் படைப்பும், ஒரே துறையில் தொடர்ச்சியாக அமையாததாகி விட்டது. சிறுவனாய் இருக்கும் பொழுது 'விடுக்தை' மூலம் இலக்கியத் துறையில் நுழைந்தேன். (விடுகதையை இலக்கியத்துள் அடக்குவர் என்று எண்ணுகின்றேன்). பின்னர் 'கவிதை' எழுதினேன். பின் 'நாவல் - சரித்திர நாவல்' எழுதினேன். இதே போன்றே முதலாவது வெளிவந்த படைப்பு நாவலாய் அமைந்திருந்தது. இரண்டாவதான இந்தப் படைப்பு 'நாடகம்'. மூன்றாவது படைப்பும் இத்தோடு வெளிவருகின்றது. ('ஸ்ரீ லங்கா' வெளியீடு). அது 'சிறுவர் இலக்கியம்'. இந்தத் தடுமாற்றத்துக்கு எனது ஸ்திரமற்ற இலக்கியப் போக்கே காரணம் எனச் சிலர் கூறலாம். "பல்துறை எழுத்தாளர் என்ற பெயர் பெறப்போய் ஒன்றுமே சாதிக்க முடியாதவராகிடுவார்" என்று சிலர் விமர்சிக்கலாம். ஆயினும் ஓர் எழுத்தாளனின் கடமை எழுதுவது என்று எண்ணுபவன் நான். அதன் படி எழுதுகின்றேன். எப்படி ஒரு நடிகன் பல்வேறு வேடங்களைப் போடுகின்றானோ அதே போல ஓர் எழுத்தாளன் பல துறைகளைத் தொட்டு தனது படைப்புக்களை வெளியிடவேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லையல்லவா!

'யாழூர் ராகம்' பிறந்ததைப் பற்றிச் சிறிது விளக்கவேண்டும். நண்பர், பிரபல இலக்கியவாதி மாத்தளை கார்த்திகேசு அவர்கள் 1993 இல் ஒரு நாள் என்னை உடப்புக்கு வருமாறு கூறினார். அங்கு சென்றபோது ஒரு தொலைக்காட்சி நாடகம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தெரியவந்தது. ஒரு கடலோரக் கிராமத்து மங்கைக்கும் அங்கு வரும் ஒரு வாலிபனுக்கும் இடையில் அரும்பும் காதல் பற்றிய அந்த நாடகத்தை மாத்தளை கார்த்திகேசு அவர்களும் அவரைச் சார்ந்த குழுவினரும் ராம்சம் வீடியோ நிறுவனத்தாரும் இணைந்து, தயாரித்துக் கொண்டிருந்தனர். அதனைப் பார்த்த போது நானும் ஒரு நாடகப் பிரதியை எழுத வேண்டும் என்றும் அதனை நாடகமாக்கித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பச் செய்ய வேண்டும் என்றும் ஒரு பேரவா எனக்குள் ஏற்பட்டது. அதன் மூலம் பிறந்ததே யாழூர் ராகமாகும்.

உடப்பிலே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த நாடகம் சிலபல காரணங்களினால் தடைப்பட்டது. அதனைப் பார்த்து எனது ஆசையும் மழுங்கியது. பல ஜாம்பவான்கள் இணைந்த அந்த நாடகத்துக்கே அக்கதி என்றால் எனது நாடகப்பிரதியின் நிலை..? அப்பொழுது எழுதப்பட்ட பிரதியே இப்பொழுது உங்கள் கரங்களில் நூல் வடிவில் தவழ்கின்றது.

நாடகத்தின் தலைப்பைப் பற்றியும் கூறவேண்டும். ராகங்களில் பல வகை, தொகை உண்டு. பிரித்து, விரித்துச் சொல்லும் போது அதற்குரிய அளவு அதிகரித்துக் கொண்டே செல்லும். இங்கு குறிப்பிடப்படும் 'ராகம்', முகாரி ராகத்தையே குறித்து நிற்கின்றது. யாழ் மண்ணில், பூபாளம் பாடவேண்டிய எத்தனையோ வேளைகளில் கூட முகாரி பாடும் அவசியம் ஏற்பட்டிருப்பதை அம்மண்ணில் பிறந்த என்னால் உணர்ந்து கொள்ள முடியும். யாழூரின் சோகத்தையும் அறிவுத் தாகத்தையும் கலந்து, இந்து - முஸ்லிம் இன ஐக்கியத்தை அதனுள் புகுத்தி நாடகமாக்க முயன்றுள்ளேன். அதன் வெற்றி தோல்வியை நீங்கள் தான் கூற வேண்டும்.

யாழ்ப்பாணத்து இந்துக்களும் முஸ்லிம்களும் பயன்படுத்தும் சொற்பிரயோகங்களைக் கொண்டே அவர்களின் உரையாடலை வெளிப்படுத்த முனைந்துள்ளேன். அந்த உத்தி எனக்குப் புதிது. அதில் நான் விட்டுள்ள தவறுகளைத் தெரியப்படுத்தினால் அடுத்த பதிப்பு மெருகேற வழிசமைத்தவராகுவீர்கள். எனது இலக்கிய முயற்சிகளுக்குப் பெருந் துணை நிற்கும் அன்புச் சகோதரர் **ஜனாப். எஸ். ஏ. ஸி. முபீன்** அவர்களுக்கும் அவர்தம் ஆருயிர்த் துணைவியார் **திருமதி. பஸ்மினா முபீன்** அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நூல் வெளிவரத் துணை நிற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர், பல விதங்களில் இந்நாட்டு இளைஞர், யுவதியருக்கு உதவி புரிந்து வருகிறார்கள். மன்றம் தனது அளப்பரிய சேவையைத் தொடர வேண்டுமென மனமாற வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
**கதைவாணன்**
**(மொஹிடீன் ரஜா)**

47/79, ஜே.பி.லேன்,
புத்தளம்.
1999-01-10

# காட்சி 1

இடம் : வீதி , சந்தை
களம் : வெளிப்புறம் (Out door)
பாத்திரங்கள் : அப்துல் ரஸாக். தர்மராசா.

*அது ஒரு பிரதான சந்தி. அதிலிருந்து ஐந்து வீதிகள் பிரிந்து செல்கின்றன. அச்சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாக "நாவாந்துறை" என்ற அம்புக்குறியுடன் ஓர் அறிவிப்புப் பலகை காட்சியளிக்கின்றது. அந்த வீதியின் முடிவில் கடல் தென்படுகின்றது. கடற்கரையோரம் சந்தையொன்று ஆரவாரத்துடன் இயங்குகின்றது.*
*மீன்களைப் பார்வையிட்டவாறு நகர்ந்து கொண்டிருக்கிறார் அப்துல் ரஸாக்.அவர் ஓரிடத்தில் நிற்கிறார். அங்கே ஒரு பெண், மீன் துண்டுகளை விற்றுக் கொண்டிருக்கிறாள்.*
*அப்துல் ரஸாக்கின் முகம் திருப்தியைக் காட்டுகின்றது.*

ரஸாக் : பாரைத் துண்டு எவ்வளவம்மா?

மீன் விற்பவள் : கிலோ எண்பது ரூவா ஹாஜியார்.

ரஸாக் : (பணத்தை நீட்டி) ஒரு கிலோதாம்மா.

*மீன் விற்பவள் ஒரு கிலோ நிறுத்து, ஒருகடதாசிப் பையிலே போட்டுக் கொடுக்க, வாங்கி. திரும்பிநடக்கின்றார் அப்துல் ரஸாக். அவர் எதிரில் வருகிறார் தர்மராசா.*

தர்மராசா : என்ன ஹாஜியார். . . புறப்பட்டு விட்டியலோ?

ரஸாக் : ஓம் தர்மராசாண்ணே. . . .இன்டைக்கு கொஞ்சம்பிந்திட்டுது

.கடைசியில, நல்லகாலம் ஒரு மூலையில கொஞ்சம் பாரைத்துண்டுகள் கிடைச்சுது.

தர்மராசா : அடடே . . . பிந்திட்டதோ? பொடிகள் கூடஇல்லையா?

ரஸாக் : ஒட்டிப் பொடிகள் அந்த மூலையில இருந்தது.(ஒரு திசையில் சுட்டிக்காட்டி) அதுவும் முடிஞ்சிருக்குமோதெரியயில்ல. பாருங்க. இல்லாட்டி நான் வாங்கினத்த ரெண்டுபேருமா பிரிச்சு எடுப்போம்.

*தர்மராசா, அப்துல் ரஸாக் காட்டிய இடத்திற்குச் சென்று , சிறிது நேரத்திலே மீனோடு திரும்பி வருகிறார்.*

தர்மராசா : நல்ல காலம் மீன் இருந்திட்டுது.

ரஸாக் : தர்மராசாண்ணே. . . எதில வந்தீங்க. ?

தர்மராசா : நடந்துதான் வந்தனான் பைக் பிரச்சினகொடுத்தது. கராஜில கொடுத்திருக்கிறன்.

ரஸாக் : அப்படியென்டா வாங்க. என்னட சைக்கிளிலே போவோம்

*இருவரும் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குச் செல்கின்றனர். அந்த சைக்கிள் நிறுத்தத்திலே பல சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அப்துல் ரஸாக் சைக்கிளுக்கான டிக்கற்றை கழற்றிக் கொடுத்து, சைக்கிளை வெளியே கொண்டு வருகிறார்.*

தர்மராசா : தாங்கோ நான் ஓடுறனான்.

தர்மராசா : தாங்கோ நான் ஓடுறனான்.

ரஸாக் : என் வாகனத்தில வருகின்ற படியால நீங்க என்னோட விருந்தாளி போல. விருந்தாளிய வேல வாங்கலாமா? அதுவுமல்லாம நீங்க என்ன விட வயசிலயும் மூத்தவர்(*தர்மராசா சிரிக்கிறார்*)

*அப்துல் ரஸாக் சைக்கிளில் ஏறி,தர்மராசாவை முன்னால் ஏற்றிஓட்டுகிறார்.*

தர்மராசா : நாளைக்கு ஏலெவல் றிஷல்ட் வருதாமே.

ரஸாக் : அதுதான் பெரிய எதிர்பார்ப்பா இருக்கு. அதோட பயமாவும்இருக்கு.

தர்மராசா : அப்படி ஏன் பயப்பிடுறியல். .?பாயிஸ் நல்ல றிஷல்ட எடுப்பார்

ரஸாக் : உங்கட மகன் கோபியும் நிச்சயம் நல்ல றிஷல்ட் எடுப்பார்

தர்மராசா : எப்படியோ...... நம்ம ரெண்டு பேரோடுபிள்ளைகளும் நமக்கு பெருமைசேர்ப்பாங்க.நாங்க அவங்கள எப்படி வளர்த்திருக்கோாம். . .?

ரஸாக் : நாமமுன் பொருமுற பேசிக் கொண்ட விஷயம் ஞாபகம்இருக்குத்தானே தர்மராசாண்ணே?

தர்மராசா : நான் மறப்பனா? நாளைக்கு றிஷல்ட் வெளிவந்ததுக்கு பிறகு,பாயிஸ்கிட்டயும் கோபிக்கிட்டயும் செல்லுவோம்.

ரஸாக் : அதுவும் தான் நல்லது.

தர்மராசா : அதற்குள் வீடு வந்து விட்டதே. (சிரிப்பு) ரொம்ப வேகமாகத்தான் சைக்கிள மிதிச்சிருக்கிறியள்.

## காட்சி 2

| | | |
|---|---|---|
| இடம் | : | கோபியின் வீடு |
| களம் | : | உட்புறம் (In door) |
| பாத்திரங்கள் | : | கோபி, பாயிஸ், சரோஜா (கோபியின் தாய்) |

*வாசற்புறமிருந்து "கோபி,கோபி" என்ற சத்தம் கேட்கிறது. தனது படிக்கும் அறையிலிருந்து அன்றைய வாரமஞ்சரியை வாசித்துக் கொண்டிருக்கும் கோபி வாசலுக்கு வருகின்றான்.*

*வாசலில் பாயிஸ் நிற்கின்றான்.*

பாயிஸ் : கோபி, லைப்ரரிக்குப் போவமா?

கோபி : எந்த லைப்ரரிக்கு? கொலிஜ் வீதிலைப்ரரிக்கா? நாச்சிமார் கோவிலடி லைப்ரரிக்கா?

பாயிஸ் : நாச்சிமார் கோவிலடி லைப்ரரிக்கு. அங்க தமிழ்வாணன் எழுதின புத்தகங்கள் அதிகமா இருக்குது போனமுற எடுத்த புத்தகங்கள வாசித்தியா?

கோபி : ஓம். நானும் வாசித்த புத்தகங்கள மாத்தத்தான் வேண்டும்.கொஞ்சம் உள்ளவந்து இருமச்சான். அஞ்சு நிமிஷத்தில வந்திடுறன்.

*கோபி உள்ளே செல்கிறான்.*

*பாயிஸ், கோபியின் படிக்கும் அறைக்குச் செல்கின்றான். அறையின் மத்தியில் ஒரு மேசை. மேசையின் வலது, இடது பக்கங்களில் புத்தக அடுக்குகளில் புத்தகங்கள்*

*பாயிஸ் ஒரு நூலை எடுக்கிறான். அந்தப் புத்தகத்தின் அட்டையில் The Secret of Human body என்ற வாசகங்கள் காணப்படுகின்றன. அதை வாசிக்கத்த தொடங்குகிறான். சிறிது நேரத்தில், அங்கே சரோஜா வருகிறாள்.*

சரோஜா : அப்படியென்ன இருக்கு உந்தப் புத்தகத்தில? இவ்வளவு டீப்பா வாசிக்கிறீர்?

பாயிஸ் : (நிமிர்ந்து பார்த்து) மனித உடலைப் பற்றி, நாங்க படிக்காத எத்தனையோ விஷயங்கள் இந்த புத்தகத்தில இருக்கு.

சரோஜா : போனமுற கோபியோட அப்பா கொழும்பு போனப்ப வாங்கி வந்தவர். நானும் படித்தனான். எனக்கென்டா ஒன்டும் விளங்கேல்ல.உங்களப் போலஎதிர் கால டொக்டர்மாருக்குத்தான் உது சரி.

பாயிஸ் : றிஷல்ட் வரமுன்னுக்கே டொக்டராக்கிட்டீங்களே அன்ட்ரீ.

சரோஜா : றிஷல்ட்டப் பார்த்துப் போட்டுத்தான் உங்கட திறமையை விளங்கிக் கொள்ளோணுமோ?

பாயிஸ் : அதில்ல. . . . வந்து. . . . .

சரோஜா : வந்துமில்ல. . . போயுமில்ல. . . நான் இப்பவே சொல்றனான் நீங்க ரெண்டு பேரும் மெடிஷினுக்கு எடுபடுவியல்.

கோபி : (உள்ளிருந்து வந்தவாறு) என்ன அம்மா. . . ஆரூடம் சொல்றியலோ?

சரோஜா : ஆரூடமோ இல்லையோன்டு நாளைக்குப் பாருமன்

*கோபியும், பாயிஸும் ஒருவரையொருவர் பார்த்து, தோள்களைக் குலுக்கிச் சிரித்தவாறு, வெளியேறுகின்றனர்.*

கோபி : நாங்க மெடிஷினுக்கு எடுபடுறமோ இல்லையோ இவங்க எல்லோருமாச் சேர்ந்து எங்களுக்கு பட்டஞ் சுட்டிடுவாங்க போல இருக்கு.

பாயிஸ் : நாளைக்கு இதே நேரம் எல்லாம் தெரிந்திடும்.

கோபி : (சைக்கிளை எடுத்தவாறு) அதை நினைக்கும் போது இன்பம் கலந்த பயமா இருக்கு.

பாயிஸ் : (தானும் சைக்கிளை எடுத்தவாறு) பதின்மூணு வருஷப்படிப்போட தலை எழுத்து நாளைக்குத் தெரிந்திடும்

கோபி : சிலபேர் உதப்பத்தியே கவலையில்லாம இருக்கினம்

பாயிஸ் : ஓம் கோபி, நேத்து ராஜாவக் கண்டன். எப்படி நீ எதிர்பார்க்கிறாயென்டு கேட்க, வாரது வரட்டுமென்டு விட்டேத்தியா பதில் சொல்றான்.

கோபி : அவன்ட றிஷல்டில எனக்கு நம்பிக்கையில்ல. அவன் ஒழுங்காகப் படிக்கவுமில்ல. அப்பர்ட கடையில அவனுக்கு ஆர்வம் வந்திடுச்சு அதனால படிப்பில விருப்பம் இல்ல.

பாயிஸ் : நல்ல கெட்டிக்காரன். அநியாயமாக்கிப் போட்டான் படிப்ப.



[library stamp]

கோபி : சில பேருக்கு படிக்க ஆர்வமிருந்தும் வசதியில்ல. ராஜாவைப் போல சிலபேர் வசதி இருந்தும்அதப்பயன்படுத்தத் தவறிவிடினம்.

*இருவரும் சைக்கிளில் ஏறிச்செல்கின்றார்கள்.*

## காட்சி 3

இடம் : பாடசாலை
களம் : உட்புறம்.
பாத்திரங்கள் : பாயிஸ், சுஜப், ஜனோசன், சொலமன், ரயிஸ், ஆசிரியர்,உபஅதிபர், அதிபர், பியோன்

*கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றது பாடசைலைக் கோபுரம். பாயிஸ் பாடசாலை பிரதான வாசலினூடாக பாடலையுள் நுழைகின்றான்.*

*பிரதான வாசலிலிருந்து நேராகச் செல்லும் பொழுது, இடது பக்கம் அதிபரின் காரியாலயம் இருக்கின்றது. வாசலில் "அதிபர்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்த்தாற்போல "உப அதிபர்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டுக்கும் நடுவில், வகுப்பறைக்குச் செல்லும் பாதை தடுக்கப்பட்டிருக்கிறது. அத்தடுப்பில், "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற வாசகங்கள் பாடசாலைச் சின்னத்தோடு காணப்படுகின்றன. தடுப்பின் இரு புறங்களிலும் இரு குட்டைக் கதவுகள்.*

*பாயிஸ் அதிபரின் காரியாலயத்திற்கு அருகில் வருகின்றான். அங்கு அதற்கு முன்பே பலமாணவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

சுஜப் : இந்தா வந்திட்டான்டா பாயிஸ். . . . .(பாயிஸைப் பார்த்து) உனக்குத்தான்டா பெஸ்ட் றிஷல்ட்டாம்

பாயிஸ் : என்ன சுஜப். . . . விளையாடுறியா?

ஜனோசன் . : பாயிஸ். . . . மாவட்டத்திலேயே நீதான் முதலாவதாம்.

பாயிஸ் : ஜனோஅப்படியாவது எனக்கு பெருமை தேடித்தாறாயே. (சிரிப்புடன்) ரொம்ப நன்றி

சஜப் : ஏன் மச்சான். . . நீ வரமாட்டியா?

பாயிஸ் : உங்களுக்கு "பயோ ஸயன்ஸ்" அவ்வளவு சுலபமாத் தெரியுதா?

சொலமன் : பயோ கஷ்டமோசஸியோ. நீ செய்திருப்பா யென்டு நம்புகிறோாம் மச்சான்

பாயிஸ் : உன் றிஷல்ட் எப்படி வருமென்டு எதிர்பாக்கிறே சொலமன்

சொலமன் : பார்ப்போம் இன்னும் கொஞ்ச நேரத்திலே தெரியத்தானே போகுது.

*அப்பொழுது அவ்வழியால் ஆசிரியர் ஒருவர் செல்ல, மாணவர் அனைவரும் எழுகின்றனர்*

மாணவர் : குட் மோனிங் ஸேர்.

ஆசிரியர் : குட் மோனிங் எவ்ரிபொடி. (அனைவரையும் ஒருமுறை பார்த்து புன் முறுவலுடன் உங்களுக்கு சிறந்த பெறுபேறு கிடைக்க,என்னுடைய வாழ்த்துக்கள்.

*ஆசிரியர் செல்கின்றார்.*

ஜனோசன் :எல்லோருக்கும் சிறந்தபெறுபேறு கிடைக்கு மென்று ஸேர் வாழ்த்தி விட்டார். அப்படியென்டா ரமீஸ் கவலைப்படத் தேவையில்ல.

*யாரோடும் கதைக்காமல் இருக்கும் ரமீஸ், ஜனோசனைப் பார்த்து முறைக்கின்றான்.*

ரமீஸ் : உனக்கென்ன ஜனோ? நல்ல றிஷல்ட் கிடைச்சா சரி இல்லாவிட்டா படிப்புக்கு ஒரு முழுக்கு போட்டிட்டு வாப்பாட கடைக்குப் போயிடுவே. எனக்கு றிஷல்ட் சரியில்லாட்டி வீட்டுப்பக்கமே போக ஏலாது.

சுஜப் : அப்படீன்டா எங்கட வீட்டுக்கு வந்திடு.

*அனைவரும் சிரிக்கின்றனர்.*

பாயிஸ் : கவலைப்படாதீங்கடா. நல்லதயே நினைப்போம்.

சொலமன் : நாம நினைக்கிறதில என்ன இருக்கு? அதுதான் எல்லாம்முடிஞ்சிருக்குமே. பேப்பர் திருத்தினவர் ஐயோ பாவம்னு அஞ்சுபத்த கூட்டியிருந்தால் தான் உண்டு.

*அப்பொழுது உதவி அதிபர், வெளியிலிருந்து பாடசாலைக்கு வருகிறார்.*

சுஜப் : றிஷல்ட் வந்திட்டுது.

*அனைவருக்கும் பதற்றம் பிடிக்கத் தொடங்குகிறது. ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள். பாயிஸ் நிலையில்லாமல் கைகளைப் பிசைகின்றான்.*

*உள்ளே வரும் உபஅதிபர், பாயிஸைப்பார்த்து ஆர்வத்துடன் புன்னகை பூர்த்து விட்டு, அதிபரின் காரியாலயத்துக்குள் நுழைகிறார். அதற்குள் ஆசிரியர்களும் அதிபரின் அறைக்குள் நுழைகிறார்கள்.*



[library stamp]

*சிறிது நேரத்தில் ஆசிரியர்கள் வெளியேறுகிறார்கள். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சிப் பிரவாகம்.*

*உப அதிபர் பெறுபேற்றுப் பத்திரங்களை, விளம்பரப் பலகையில் இட்டு விட்டு, மாணவர்களை நோக்கி வருகிறார்.*

உபஅதிபர் : இனிமேலும் உங்கள தாமதிக்க வைக்கிறது சரியில்ல. போய்ப் பாருங்க. (பாயிஸை நோக்கி வந்து) கொங்கிராஜுலேஸன்ஸ் (கைகொடுக்கிறார்)

*மாணவர் அனைவரும் விளம்பர பலகையை முற்றுகை இடுகின்றனர்.*
*சிலர் மகிழ்ச்சியடைகின்றனர். சிலர் கவலையுடன் காணப்படுகின்றனர். சிலர் அடுத்தவரைத் தேற்றுகின்றனர். அனைவரும் பாயிஸுக்குக் கை கொடுக்கின்றனர்.*

*பியோன் வந்து ஏதோ கூற, மாணவர்கள் அதிபரின் காரியாலயத்துக்குள் நுழைகின்றனர்.*

*அதிபர், அனைவரின் முகங்களையும் உற்று நோக்குகிறார். பின் உரையாற்றத் தொடங்குகிறார்.*

அதிபர் : என் பேரன்புக்குரிய மாணவமணிகளே, இது வரை காலமும் நீங்கள் படித்த படிப்புக்குரிய இரண்டாவது பெருந் தடையைப் போன்ற பரீட்சையின் பெறுபேறுகள் இன்று உங்கள் வசம் உள்ளன. இதிலே பல மாணவர்கள் தங்கள் திறமையைக் காட்டியுள்ளீர்கள். ஒரு சிலர் சித்திபெறத் தவறியுள்ளீர்கள். அத்தகையோர் கவலை கொள்ளக் கூடாது. நிச்சயம் அடுத்தமுறை சித்தியடையலாம் என்ற நம்பிக்கையோடு

தொடர்ந்து படியுங்கள். வெற்றி பெறலாம். உங்களுக்குப் போதிய வசதிகளை நாங்கள் செய்திருக்கின்றோம். தொடர்ந்து நீங்கள் பாடசாலைக்கு வாருங்கள்.

*இடையில் நிறுத்திவிட்டு அதிபர் அனைவரையும்ஒரு முறை நோக்குகின்றார்*

அதிபர் :மாணவர்களே, உங்களில் பலர் நற்பெறுபேறுகளைப் பெற்று, இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளீர்கள். உங்களுக்கு பாடசாலையின் சார்பில், பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னும் ஒரு சில மாதங்களில் உங்களுக்கான புள்ளிகளும் வெட்டுப் புள்ளிகளும் வந்து விடும். அப்பொழுது பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான பாராட்டு விழா ஒன்றை, நாங்கள், பழைய மாணவர் சங்கத்தோடு சேர்ந்து நடாத்துவோம். நீங்கள் அவ்விழாவில் கலந்து கொள்ள வேண்டும். உங்கள் அனைவரின் வளமான வாழ்வுக்கும், எனது பிரார்த்தனைகள் என்றென்றும் உண்டு.

*அதிபர் ஒவ்வொருவராக கை கொடுத்து, சிறிது உரையாடி, அனுப்பி வைக்கின்றார்.*

## காட்சி 4

(காட்சி 3இன் தொடர்ச்சிப் பொழுது)

இடம் : பாயிஸின் வீடு, தெரு, கோபியின் வீடு.

களம் : உட்புறமும், வெளிப்புறமும்.

பாத்திரங்கள் : பாயிஸ், அப்துல் ரஸாக், ரைஹானா, கோபி, கோபியின்நண்பன் துஷ்யந்தன் இன்னும், சிலரும், தர்மராசா, சரோஜா, கோபியின் அக்கா சுசீலா, அத்தான் வரத ராஜன்

*பாயிஸ் சைக்கிளை வேகமாக மிதித்துச் செல்கின்றான். வீட்டுக்குச் செல்கிறான். பெற்றோரிடம் ஏதோ மகிழ்ச்சியோடு கூறுகிறான்.*

ரஸாக் : அல்ஹம்து லில்லாஹ். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

*அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அரும்புகிறது. மகனை அணைத்துக் கொள்கிறார். அதனைக் காணும் பாயிஸின் தாய் ரைஹானாவுக்கும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அரும்புகிறது. உள்ளே சென்று தேநீர் கோப்பையை ஏந்தி வருகிறாள்.*

*பாயிஸ், தாயார் கொண்டு வந்து கொடுக்கும் தேநீரை அவசர அவசரமாகப் பருகுகிறான்.*

பாயிஸ் : கோபி வீட்ட போய்ட்டுவாரன்.

*பாயிஸ் வெளியேறி, கோபி வீட்டுக்குச் செல்கிறான்.*

தர்மராசா : வா பாயிஸ், றிஷல்ட்டெல்லாம் எப்படி?

பாயிஸ் : திரீ ஏ, பீ, அங்கிள்.

தர்மராசா : கொங்கிராஜு லேஸன்ஸ்.

பாயிஸ் : கோபி இன்னும் வரல்லயா?

தர்மராசா : இன்னும் வரல்ல

பாயிஸ் : நான் ஹின்டு கொலிஜுக்குப் போய், கோபியோட வாரன்.

*பாயிஸ் வெளியேறுகிறான், செல்லும் வழியில், கோபி நண்பர்களோடு வந்து கொண்டிருப்பதைக் காண்கிறான். பாயிஸைக் கண்டவுடன், அருகில் வந்து, கைகளைப் பிடித்துக் கொள்கிறான் கோபி.*

துஷ்யந்தன் : உம்மட நண்பர் ஃபோர் ஏ எடுத்திருக்கிறார்.

பாயிஸ் : கொங்கிறாஜு லேஸன்ஸ். இத நான் எதிர்பார்த்தேன்.

கோபி : உன்ட றிஷல்ட் என்ன?

பாயிஸ் : திரீ ஏ, பீ.

கோபியும்
நண்பர்களும் : கொங்கிராஜு லேஸன்ஸ்.

*பின்பு, கோபியின் நண்பர்கள் பிரிந்து செல்கின்றார்கள். பாயிஸும் கோபியும் வீடு நோக்கி புறப்படுகிறார்கள்.*

பாயிஸ் : நீ மாவட்டத்தில எத்தனையாவது?

கோபி : ரெண்டாவது

பாயிஸ் : நான் எட்டாவது.

கோபி : எப்படியோ, எங்கமேல மத்தவங்க வச்சிருந்த நம்பிக்கையை காப்பாத்தி விட்டனாங்க

*இருவரும் கோபியின் வீட்டுக்குச் செல்கிறார்கள். அங்கு பாயிஸின் தந்தை அப்துல் ரஸாக்கும் இருக்கிறார்.*

பாயிஸ் : கோபிக்கு ∴போர் ஏ அங்கிள்.

தர்மராசா : எனக்குத் தெரியும். நான் எதிர் பார்த்தது தான். கொங்கிராஜு லேஸன்ஸ் மை ஸன்.

*மகனைத் தழுவிக் கொள்கிறார்*

ரஸாக் : அயேம் வெரி கிளேட் எபவுட் போத் யூ.

சரோஜா : ஹின்டுவுக்கு எத்தன ∴போர் ஏ?

கோபி : நாலு. மாவட்டத்தில முதலாவது மாணவனா ஒருத்தன் வந்திருக்கான்.

ரஸாக் : ஹாட்லி கொலிஜ்க்கு அஞ்சு ∴போர் ஏயாம். ஒருவன் அயலேன்ட்லயே ∴பெஸ்டா வந்திருக்கிறானாம். அவன் என்னட நண்பரோட மகன் தான். அவர் இப்பதான் ∴. போன் பண்ணிச் சொன்னார்.

தர்மராசா : யாரு? நம்ம ராமகிருஷ்ணனோட மகனா?

ரஸாக் : ஓம். உங்களுக்கு அவரத் தெரியுமா?

தர்மராசா : பெரு நெருக்கமில்ல. பழக்கம்

ரஸாக் : வேம்படி லேடீஸ் எப்படியோ தெரியேல்ல.

சரோஜா : வேம்படிக்கும் சென் ஜோன்ஸ"க்கும் மூ ணு ஃபோர் ஏயாம்

தர்மராசா : கதீஜா கொலிஜ் எப்படி ?

ரஸாக் : கொமர்ஸ்ல திரீ ஏ, பீயாம்.

சரோஜா : ஒஸ்மானியாவில உமக்குத் தானே பாயிஸ் பெஸ்ட் றிஷல்ட்?

பாயிஸ் : ஓம் அன்ட்ரி.

*அப்பொழுது கோபியின் அக்கா, தன் புருஷனோடு வந்து சேருகிறாள். கோபியைக் கண்டவுடன் அவள் முகம் பெருமையால் பிரகாசிக்கின்றது.*

சுசீலா : கோபி, உம்மட .பிரண்ட் மோகன் றிஷல்ட்ட சொன்னவன். அப்பா அம்மாட பெருமைய காப்பாதிட்டே

வரதன் : உந்தாரும் கோபி, உம்மட வெற்றிக்காக அத்தானோட சிறிய பிரஸன்ட்

*வரதன் ஒரு பெரிய கண்டோஸ் பெட்டியைக் கொடுக்கிறான். கோபி அதை அனைவருக்கும் கொடுக்கிறான்*

வரதன் : ரெண்டு மூணு கிழமையாவே சுசிக்கு, கோபியோட பேச்சுத்தான் அவள் எதிர்பார்த்தது போலவே கோபி நீ பாஸ்பண்ணிவிட்டீர். உது உம்மோட மகிழ்ச்சியில்ல. உம்மட அக்காவோட மகிழ்ச்சி என்டுதான் சொல்ல வேணும்.

*அனைவரும் சிரிக்கின்றனர்.*

*அதன் பிறகு அப்துல் ரஸாக் சிறிது கனைக்கிறார். அவரை நோக்குகிறார் தர்மராசா. இருவர் பார்வைகளும் ஏதோ பேசிக் கொள்கின்றன.*

தர்மராசா : நான் இப்ப உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயத்த சொல்லப் போறனான். கோபியைப் போலவே பாயிஸும் நம்ம வீட்டுப் புள்ளதான். ரெண்டு பேரும் "பெஸ்ட் றிஷல்ட்" எடுத்திருக்கினம். றிஷல்ட்ஸ் வாரத்துக்கு முன்னாடியே நானும் ரஸாக் ஹாஜியாரும். பாயிஸும், கோபியும் நல்ல றிஸல்ட்ஸ் எடுத்தா, ரெண்டு குடும்பமும் சேர்ந்து ஒரு சிறிய பார்ட்டி கொடுக்கிறதென்டு தீர்மானிச்சிருக்கிறம். அது போலவே ரெண்டு பேரும் நல்ல றிஷல்ட்ஸ் எடுத்திருக்கினம்.

சரோஜா : நீங்க ரெண்டு பேரும் சரியான ஆட்களப்பா. உது நல்ல திட்டம்தான்.

சுசீலா : ஒரு தம்பியப் பாராட்ட வந்தனான், இன்னொரு தம்பியையும் வாழ்த்தி விடுறன். பாயிஸ்

எதிர்காலத்தில கைராசியான டொக்டரென்டு
பேரெடுக்கிறதுக்கு என்னட வாழ்த்துக்கள்.ஆனா
ஒரு விஷயத்த மறந்திடக் கூடாது.
எதிர்காலத்தில,கோபிக்கு போட்டியா டிஸ்பென்ஸரி
போடக் கூடாது.

*அனைவரும் சிரிக்கின்றனர். சரோஜா அனைவருக்கும் தேநீர் வழங்குகிறாள்.*

## காட்சி 5

| | | |
|---|---|---|
| இடம் | : | கோபியின் வீடு |
| களம் | : | உட்புறம். |
| பாத்திரங்கள் | : | கோபி, பாயிஸ், வேலுப்பிள்ளை ஆசிரியர், கோபியின் பெற்றோர், பாயிஸின் பெற்றோர், விழாவுக்கு வருகை தரும் விருந்தினர். |

*கோபியின் வீடு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. வாசலில் கோபியும், பாயிஸூம் நின்று பார்ட்டிக்கு வருபவர்களை வரவேற்கின்றார்கள். கோபியின் பெற்றோரும், பாயிஸூன் பெற்றோரும் சிரித்த முகத்துடன் விருந்தினர்களைக் கவனிக்கின்றார்கள்.*

*சங்கீதக் கதிரை நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. அந்த நிகழ்ச்சியிலே, ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து கலந்து கொள்கின்றார்கள். அதில், ஓர் ஆசிரியர் வெற்றிபெறுகின்றார். நண்பனொருவன் கவிதை வாசிக்கின்றான். ஆசிரியர் ஒருவர் வாழ்த்துரைக்கின்றார். கோபி, பாயிஸ் ஆகிய இருவர் சார்பிலும் கோபி நன்றியுரை வழங்குகிறான். விழாவுக்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக விடைபெறுகின்றார்கள்.*

*வேலுப்பிள்ளை ஆசிரியர் கோபியையும், பாயிஸையும் நெருங்குகிறார்*

கோபி : பாயிஸ், இவர் எங்க அம்மாவோட தாய்மாமா. வேலுப்பிள்ளை மாஸ்டரென்டு கேள்விப் பட்டிருப்பாயே. இப்ப ஓய்வு பெற்றிட்டார்.

பாயிஸ் : கிளேட் டு மீட்யு ஸேர்

ஆசிரியர் : ஸேம் டு யு. உங்க ரெண்டு பேரோட ஒற்றுமைய நான் பாராட்டுறன்.உங்களப் போல

எல்லோரும் வாழ்ந்து வந்தா இந்த நாட்டில இனப்பிரச்சினைன்னு ஒன்னு இருக்காது.

*கோபியும், பாயிஸ"ம் புன் முறுவல் சிந்துகின்றனர்.*

ஆசிரியர் : நீங்களிருவரும் கெம்பஸ் கிடைக்கும் வரையும் என்ன செய்யப் போறதா உத்தேசம்?

*ஒருவர் முகத்தை அடுத்தவர் பார்க்கின்றனர். கோபி தோள்களைக் குலுக்குகிறான்*

ஆசிரியர் : ஏதாவது வழியில அந்தக் காலத்த பயன்படுத்திக்கலாமே.

கோபி : எப்படி?

ஆசிரியர் : டியுஸன் ஏதாவது கொடுக்கலாம் . அல்லது ஸ்கூல்ல வொலன்டியர்ஸா டீச் பண்ணலாம்.

பாயிஸ் : நல்ல ஐடியா. ஃபிரீயா நாங்க டியுஷன் சொல்லிக் கொடுக்கலாம்.

*வேலுப்பிள்ளை ஆசிரியர் சிரிக்கிறார்.*

ஆசிரியர் : உந்தக் காலத்தில ஃபிரீயா டியுஷன் கொடுத்தா ஒரு புள்ளையும் வராது. வந்தாலும் ரெகுலரா வந்து படிக்காது. அதுல அக்கற இருக்காது.

கோபி : அப்ப என்ன செய்யலாம்?

ஆசிரியர் : அரைக்கட்டணத்தில படிப்பிக்கலாம்.

பாயிஸ் : அதுவும் நல்லது தான்

ஆசிரியர் : மிகவும் கஷ்ட.மான பிள்ளைய ளுக்கு

.·.பிரீயா படிப்பிக்கலாம்.

கோபி : குட் ஐடியா.

ஆசிரியர் : எதுக்கும் உங்க அப்பா, அம்மாகிட்டயும் ஆலோசன கேட்டுக் கொள்ளுங்கோ. நான் போட்டு வாரன்.

*ஆசிரியர் வெளியேறுகிறார்.*

பாயிஸ் : வேலுப்பிள்ளை மாஸ்டர் நமக்கொரு நல்ல பாதையைக் காட்டி விட்டார்.

கோபி : அவர் அப்படித்தான். தன்னால இயன்ற வகையில சமூகத்துக்கு உதவவேணும் என்ற கொள்கையுடையவர் அவர்.சிறுவயசிலேர்ந்தே அவர்அப்படித்தானென்டு அம்மா சொல்லுறவ.

பாயிஸ் : நாங்க எக்ஸாம் எடுத்தவிட்டு இந்த மூனு, நாலு மாதங்களை வீணாய்க்கழித்துவிட்டோம். இன்னும்ரெண்டு ரெண்டரை வருஷங்களையும் வீணாக்காமல் மாஸ்டர் சொல்லுறமாதிரி டியூஷன் கொடுத்தால் நல்லது. தான் நான் வாப்பா, உம்மாக்கிட்ட கதைக்கிறன். நீயும் அப்பா, அம்மாகிட்ட கலந்து ஆலோசிமச்சான்.

கோபி : அவையல் நிச்சயம் தடை சொல்ல மாட்டினம்.

பாயிஸ் : நானும் அப்படித் தான் நம்புறன். அவங்க எங்களுக்கு ஐடியாஸ் தரலாம்.

கோபி : அவையள் ஐடியாஸ் தந்தபடியால தான் உந்த பார்ட்டிகூட நிறைவாக முடிஞ்சுது. அவையளோட ஆலோசனைகளை நாங்க கடைபிடிக்க வேணும்.

## காட்சி 6

(இது ஒரு குறுங்காட்சி)

| | | |
|---|---|---|
| இடம் | : | பாயிஸ், கோபி ஆகியோரின் வீடுகள் |
| பாத்திரங்கள் | : | கோபி, பாயிஸ், தர்மராசா, சரோஜா, அப்துல்ரஸாக்,ரைஹானா |
| களம் | : | உட்புறம் |

*கோபி தனது பெற்றோரோடு கதைக்கின்றான். தர்மராசா ஏதோ கேட்கின்றார். கோபி பதிலளிக்கின்றான். அவர் ஏதோ கூறுகின்றார். அதைக் கேட்கும் கோபியின் முகம் பிரகாசம் அடைகின்றது.*

*பாயிஸ் தனது பெற்றோரோடு கதைக்கின்றான். தாயும் தந்தையும் ஒருவர் முகத்தை இன்னொருவர் நோக்கி, புன்முறுவல் பூக்கின்றார்கள். பின்பு அப்துல் ரஸாக் ஏதோ கூறுகின்றார். அதைக் கேட்கும் பாயிஸின் முகம் பிரகாசமடைகின்றது*

## காட்சி 7

இடம் : கோபியின் வீடு
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ், தர்மராசா, சரோஜா, அப்துல் ரஸாக், ரைஹானா, வேலுப்பிள்ளை ஆசிரியர்.
களம் : உட்புறம்.

*கோபியின் வீட்டில் கோபி, பாயிஸ், தர்மராசா, சரோஜா, அப்துல் ரஸாக், ரைஹானா ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள். அப்பொழுது வெளியிலிருந்து வருகிறார் வேலுப்பிள்ளை ஆசிரியர்.*

சரோஜா : வாங்க மாமா... சும்மா இருந்த பிள்ளைகளத் தூண்டி விட்டிட்டீங்க இல்லையா?

*வேலுப்பிள்ளை ஆசிரியர் வந்து அமருகின்றார்.*

ஆசிரியர் : என்னம்மா சொல்றனி...?

சரோஜா : டியூஷன் ஐடியாவத்தான் கூறுறேன்.

ஆசிரியர் : கெட்டிக்காரப் பிள்ளையள் கெம்பஸ் கிடைக்கும் வரையும் சும்மா இருக்கப் போகுதுகள் என்றுதான் அந்த ஐடியாவக் கொடுத்தனான். உந்தப் பிள்ளையளோட அறிவு நாலு பிள்ளைகளுக்கும் கிடைக்கட்டுமே.

தர்மராசா : (சரோஜாவைப் பார்த்து) நீரென்னப்பா.... வந்ததும் வராததுமா மாமாவோட விளையாடுறீர். அவர் பயந்து போயிட்டார்.

*எல்லோரும் சிரிக்கின்றார்கள்.*

ஆசிரியர் : அப்பா... இப்பதான் போன உயிர் திரும்பி வந்துது. நானும் என்னட ஐடியா உங்களுக்குப் பிடிக்கவில்லேன்டு பயந்து போட்டன்.

சரோஜா : அதப்பத்தித்தான் மாமா கதைச்சுக் கொண்டிருந்தனாங்க. நல்ல நேரத்தில் நீங்களும் வந்திட்டியள்.

ஆசிரியர் : திட்டம் எந்தளவில் இருக்குது?

தர்மராசா : இடமெல்லாம் எடுத்தாச்சு. ஆசிரியர்களத்தான் தெரிவு செய்ய வேணும்.

ஆசிரியர் : இடம் எங்க எடுத்திருக்கிறியள்?

தர்மராசா : நாவலர் ரோட்டில, மனோகராச் சந்திக்குப் போவதுக்கு இடையில ஒரு பெருங்காணி இருந்ததல்லோ.... அதத்தான் எடுத்து இருக்கினம்.

ஆசிரியர் : ஓமோம்... அக்காணியில பின்னால ஒரு வீடும் இருக்குதல்லோ?

தர்மராசா : வீட்டில வீட்டுக்காரர் இருப்பினம். முன்பகுதியில கொட்டில் போட்டு கிளாஸ்கள நடத்தலாம்.

ஆசிரியர் : எவ்வளவு வாடக கேட்டினம்?

கோபி : கிளாஸ் நடத்திறதுக்கென்டு சொன்னதால மாதம் இருநூறு ரூபா கொடுத்தாப் போதுமென்டிட்டினம்.

ஆசிரியர் : கேட்க ரொம்ப சந்தோஷமா இருக்கு. (அப்துர் ரஸாக் ரைஹானா ஆகியோரைப் பார்த்து) நீங்க இதப்பத்தி என்ன சொல்லுறியள்?

ரஸாக் : சொல்லிறதுக்கு என்ன இருக்கு? நல்ல விஷயங்களுக்கு நாமளும் ஆதரவு கொடுக்கத்தானே வேணும்.

ஆசிரியர் : உதுல இன்னொரு விஷயமும் இருக்கு பாருங்கோ எங்கட பிள்ளையள் படிப்பிக்கும் போது மத்தப் பிள்ளையளுக்குப் பிரயோசனம் கிடைக்கிறதோட எங்கட பிள்ளையளின் அறிவும் விருத்தியடையும். நான் சொல்லுறத ஏத்துக் கொள்றியளோ?

*அங்கு அமர்ந்திருக்கும் அனைவரும் தலையசைத்து ஆமோதிக்கிறார்கள்.*

ரஸாக் : டீச்சர்ஸ தெரிவு செய்ய வேணுமே மாஸ்டர். கோபியும் பாயிஸுமே இந்த விஷயம் சம்பந்தமா முழு விஷயத்தையும் தீர்மானிச்சுக்கட்டுமென்டு நாங்க விரும்பிறம். எல்லா விஷயத்திலயும் நாம தலையிடுறது சரியில்லதானே?

ஆசிரியர் : அதுசரி (கோபியையும் பாயிஸையும் பார்த்து) நீங்க என்ன முடிவு செஞ்சிருக்கிறியள்?

கோபி : ஏ எல் எடுத்திட்டு யூனிவர்ஸிட்டிக்காகக் காத்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கலாமென்டு நினைக்கிறம். நீங்க என்ன நினைக்கிறியள்?

ஆசிரியர் : உது நல்ல யோசனை பெஸ்ட் றிஸல்ட் எடுத்தவர்களாகவும் இருக்க வேணும்.

ரைஹானா : (கோபியையும் பாயிஸையும் பார்த்து) எந்தெந்த வகுப்புக்கள நடத்தப் போறீங்க?

கோபி : எட்டாம் ஆண்டிலிருந்து ஏ எல் வரைக்கும்.

ஆசிரியர் : நீங்க என்னென்ன பாடங்கள் எடுக்கப் போறியள்?

பாயிஸ் : நான் பொட்னி , கோபி ஸுவோலஜி.

ஆசிரியர் : மத்தப் பாடங்களுக்குத் தீர்மானிச்சிட்டியளோ?



[library stamp in Sinhala, partly legible: ... 5000 ... 17, ...]

கோபி : கெமிஸ்ட்ரி க்கு ஜெயகீதனக் கேட்டுப் பார்க்கலாமென்டிருக்கிறோம். அவன் டெஸ்ட் எடுக்க முன்னமே மத்தவங்களுக்கு டவுட்ஸ் கிளியர் பண்றவன்.

பாயிஸ் : பிஸிக்ஸ் ஸுக்கு அஹமட் அலி எப்படி கோபி?

கோபி : உம்... அவன கேட்டுப் பார்க்கலாம்.

ஆசிரியர் : எல்லாப் பாடங்களையும் ஆரம்பத்திலேயே கொடுக்க வேண்டுமென்டுமென்றில்லை. சில பாடங்களுக்குப் பொருத்தமானவங்க கிடைக்காவிட்டால் சற்றுப் பிந்தி ஆரம்பிக்கலாம்.

பாயிஸ் : நீங்களும் ஒரு பாடம் எடுக்க வேண்டும் மாஸ்டர்.

ஆசிரியர் : (சிரிப்புடன்) நானா? இவ்வளவு காலமும் ஏதோ என்னால முடிஞ்சதச் செய்திட்டன். இனி என்னால முடியாது. அதுமட்டுமில்லாம இளந்தலைமுறைக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேணும்.

ரஸாக் : நல்ல காலம். மாமாவப் படிப்பிக்க விட்டா ஒரு புள்ளயளும் வராது. நல்லா அடிப்பார்.

ஆசிரியர் : அப்படி அடிச்சுப் படிப்பிச்சதனாலதானே நீ வாய்ப்பாடு பாடமாக்கினனீ.

*அனைவரும் சிரிக்கிறார்கள்.*

## காட்சி 8

இடம் : கல்வி நிறுவனம்.
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ், வேலுப்பிள்ளை ஆசிரியர், சில மாணவர்கள், ஓர் ஆசிரியர்.
களம் : உட்புறம்.

*கல்வி நிறுவன வாசலில் கோபியும் பாயிஸும் நிற்கிறார்கள். பின்புறமாக, தூரத்தில் சில மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.*

கோபி : பாயிஸ், ஆறு மாசம் ஓடினதே தெரியயில்ல. டியூஷன் தொடங்கியதுக்குப் பிறகு, நேரம் போறதே தெரியயில்ல இல்லையா?

பாயிஸ் : அதானே கோபி, படிப்பிக்கும் போதுதான எங்களுக்கும் பல புது விஷயங்கள் தெரியவருது. புதுசு புதுசா அறிய வேண்டுமென்ற ஆர்வமும் ஏற்பட்டிருக்குது.

*அப்போது அங்கே வேலுப்பிள்ளை ஆசிரியர் வருகிறார். மூவரும், ஒரு, வகுப்பு நடைபெறாத வகுப்பறையுள் சென்று அமருகின்றனர்.*

ஆசிரியர் : என்ன... இன்டைக்கு உங்க ரெண்டு பேருக்கும் கிளாஸ் இல்லையா?

பாயிஸ் : இல்ல ஸேர். வழமையா புதன்கிழமைகளில கோபிக்கு கிளாஸ் இல்ல. இன்டைக்கு எனக்குக் கொஞ்சம் சுகமில்லாததால நான் லீவு எடுத்தேன்.

ஆசிரியர் : என்ன சுகமில்ல... காய்ச்சலா?

பாயிஸ் : ஓம்... தடுமல் காய்ச்சல்.

ஆசிரியர் : பிறகெப்படி...? உங்களுக்கு ஏ எல் மார்க்ஸ் வந்திருக்கிறதாக் கேள்விப்பட்டனான்.

கோபி : நேத்துத்தான் வந்துது... எனக்கு முந்நூற்று அறுபது. பாயிஸுக்கு முந்நூற்று முப்பத்தொம்பது.

ஆசிரியர் : வெரிகுட். உங்களுக்கு மெரிட்டில கெம்பஸ் கிடைச்சிடும். மத்தப் பிள்ளையளுக்கு எப்படி?

கோபி : அதிகமானவங்களுக்கு கட் ஓப்ஃ. மார்க்ஸ் வந்தாத்தான் தீர்மானிக்க முடியும்.

ஆசிரியர் : கட் ஓஃப் மார்க்ஸ் வந்தாத்தான் தீர்மானிக்க முடியும்.

பாயிஸ் : எப்படியும் ஏழெட்டு மாசத்துக்கு மேல செல்லும்.

ஆசிரியர் : உம்... நம்ம நாட்டில எல்லாத்துக்கும் வெயிட் பண்ண வேண்டியதாப் போயிடுச்சு.

கோபி : ஆனா எங்களுக்கு அதப்பத்திய பிரச்சின இல்ல.

ஆசிரியர் : ஏன்...?

கோபி : நாங்க இந்த இடைக்காலத்த வீணாக் கழிக்கயில்லயே... நீங்க எங்களுக்கொரு வழியக் காட்டியிருக்கீங்களே...

ஆசிரியர் : (சிரிப்புடன்) அம்மாவ மாதிரியே நல்லாப் புகழுறே கோபி.

பாயிஸ் : அது பெறும் புகழ்ச்சியில்ல ஸேர்... அடி மனதிலிருந்து வெளிவரும் பாராட்டு.

ஆசிரியர் : அட.... நீயும் நல்லாப் புகழுறேயே...

*மூவரும் சிரிக்கிறார்கள்.*

ஆசிரியர் : அப்ப, அதிகமான பிள்ளையள் வெட்டுப் புள்ளிகள் வெளிவரும் வரைக்கும் "கெம்பஸ்" கிடைக்குமா, கிடைக்காதாவென்டு தெரியாமத் திண்டாட்டத்தோட இருக்க வேண்டியதுதான். இல்லையா?

பாயிஸ் : ஓம் ஸேர்... எங்கட ".:.பிரண்ட்ஸ்" மார் சிலர் அடுத்தமுற "எக்ஸாம்" எடுக்கிறதுக்காக இப்பவே தயாராகி விட்டான்கள்.

ஆசிரியர் : அதுதான் சரி. காத்துக்கொண்டிருந்து கிடைக்காம விட்டால், அதுக்குப்பிறகு ஒரு வருஷம் அநியாயமாகிவிடும். நீங்க அவையளுக்கு உதவி செய்யிறனீங்கள் தானே?

கோபி : ஏதோ எங்களால முடிஞ்சதச் செய்யிறோம்.

ஆசிரியர் : சரி, நீங்க கதைச்சுக்கொண்டு நில்லுங்கோ. நான் இங்கால ஒரு நண்பர் சந்திக்க வந்தனான். போட்டு வாரன்.

*ஆசிரியர் நடந்து செல்கிறார்.*

## காட்சி 9

இடம் : பாயிஸின் வீடு
பாத்திரங்கள் : பாயிஸின், அவனுடைய மச்சான் றியாஸ்.
களம் : உட்புறம்.

*பாயிஸ் வெளியிலிருந்து தலையில் தொப்பியோடு வீட்டுக்குள் நுழைகின்றான். அங்கு அவனுக்காக அவனுக்காக அவனுடைய மச்சான் றியாஸ் காத்துக் கொண்டிருக்கிறான்.*

பாயிஸ் : என்ன மச்சான்... (அவனுக்கு எதிரில் சென்று அமர்ந்தவாறு) வந்து மிச்ச நேரமா?

றியாஸ் : இல்ல மச்சான்... இப்பத்தான் வந்தேன். மாமி நீ பள்ளிக்குப் போயிருக்கிறதா சொன்னா.

பாயிஸ் : சாவச்சேரி ஸ்கூலுக்கு "டிரான்ஸ்.்.பர்" கிடைச்சிருக்கிறதா கேள்விப்பட்டேன். பிரயாணமெல்லாம் கஷ்டமாயிருக்கும். இல்லையா?

றியாஸ் : என்ன செய்யிறது? "டீச்சிங்" செஞ்சுக் கொண்டு "டிரான்ஸ் .்.பர்" வரக்கூடாதென்டு எதிர்பார்க்க முடியுமா?

பாயிஸ் : வானத்துக்குக் கீழ வாழ்ந்து கொண்டு மழை வரக்கூடாதென்டு எதிர்பார்க்க முடியாதுதான்.

*இருவரும் சிரிக்கிறார்கள்.*

றியாஸ் : மச்சான்... உன்கிட்ட ஒரு விஷயம் பேசவேணுமென்டு தான் வந்தேன்.

பாயிஸ் : சொல்லுங்க மச்சான்.

றியாஸ் : நீயும் உன்னட கூட்டாளி கோபியும் சேர்த்து ஒரு டியூஷன் நடத்திறதாகவும் நல்ல லாபம் கிடைக்கிறதாகவும் கேள்விப்பட்டேன் சந்தோஷமா இருந்துது.

பாயிஸ் : நாங்க பணம் சம்பாதிக்கிறதுக்காக டியூஷன் நடத்தயில்ல மச்சான். மாணவர்களுக்கு உதவி செய்யிறதுக்காகத்தான் நடத்திறோம். இருநூறு மாணவங்க படிக்கிறாங்க. அதில நாப்பது பேரிட்ட காசு வாங்கிறதில்ல. கஷ்டப்பட்ட பிள்ளைங்க. மத்தவங்களிட்டயும் அரைவாசி கட்டணந்தான். எல்லாங் கூட்டிக் கழிச்சுப் பார்த்தா படிப்பிக்கிற ஒவ்வொருத்தருக்கும் ஆயிரம், ஆயிரத்திநூறு கிடைக்கும்.

றியாஸ் : அவ்வளவுதானா? நானும் ஏதோ ஐயாயிரம் பத்தாயிரம் கிடைக்குமென்டல்லவா நினைச்சேன்.

*பாயிஸ் புன்முறுவல் பூக்கின்றான்.*

றியாஸ் : அது சரி மச்சான், ஆயிரம் ரூபாக்காகவா இந்தப்பாடு படறே. அதவிட வேற ஏதாவது தொழில் பார்க்கலாமே.

பாயிஸ் : அதான் சொன்னனே மச்சான். பணம் சம்பாதிக்கிற நோக்கமில்லயென்டு. கெம்பஸ் கிடைக்கிற வரைக்கும் ஏதோ எங்களால ஆன சேவைய செய்யிறோம்.

றியாஸ் : நீ இன்னும் உலகத்தப் புரிஞ்சுகொள்ளயில்ல மச்சான். பணமென்டா பிணங்கூட வாயப்பிளக்கும். தெரியுந்தானே.

*பாயிஸ் மீண்டும் புன்முறுவல் பூக்கின்றான்.*

றியாஸ் : அது சரி, எனக்கு ஏதாவது ஒரு கிளாஸ்



[library stamp in Sinhala script]

ஸெட் பண்ணித் தரேலாதா? டீச்சிங் சம்பளத்த மட்டும் வச்சு காலந்தள்ள ஏலாமல் இருக்கு.

பாயிஸ் : நாங்க எல்லோரும் ஏ. எல் எடுத்துப் போட்டு இருக்கிற மாணவங்கதான் படிச்சுக் கொடுக்கிறோம். உங்களுக்கு ஒரு கிளாஸ் தாரது சம்பந்தமா கோபிகிட்ட கதைச்சுப் போட்டுச் சொல்லுறன் மச்சான்.

*அதைக் கேட்டதும் றியாஸின் முகம் கோபத்தைப் பிரதிபலிக்கின்றது.*

றியாஸ் : எனக்கொரு சான்ஸ் தாரத்துக்கு என்னத்துக்கு அந்த கோபிக்கிட்ட கதைக்கோணும். உனக்கும் இந்த டியூட்டரி யில அதிகாரம் இருக்குத்தானே.

பாயிஸ் : கோபிக்காதீங்க மச்சான். நானும் கோபியும் டியூட்டரி விஷயமா கலந்து பேசித்தான் முடிவெடுக்கிறது வழக்கம்.

றியாஸ் : உனக்கு நான் பெரிசாப் படயில்ல... அந்தத் தமிழன் பெரிசாத் தெரியிறான் இல்லையா?

பாயிஸ் : (பதற்றத்துடன்) சத்தமாப் பேசாதீங்க மச்சான். இப்படிப் பேசுறது சரியில்ல. இப்படிச் சில பேர் துவேஷமாச் சிந்திக்கிறதால தான் இந்த நாடே இப்படிச் சீரழிஞ்சு போய்க் கொண்டிருக்குது.

றியாஸ் : இந்த உபதேசமெல்லாம் எனக்கு வேணாம். எனக்கொரு சான்ஸ் தரேலுமா, ஏலாதா?

பாயிஸ் : நான் கோபிக்கிட்ட பேசிட்டுத்தான் முடிவு சொல்ல முடியும் மச்சான்.

றியாஸ் : முடிவு நல்ல முடிவா இருக்கட்டும். நான் வாரன்.

*றியாஸ் வெளியேறுகின்றான். பாயிஸ் மௌனமாக அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருக்கின்றான்.*

## காட்சி - 10

இடம் : பாயிஸின் வீடு.
பாத்திரங்கள் : பாயிஸ், ரைஹானா.
களம் : உட்புறம்.

*தொலைக்காட்சியில் சுவையான நிகழ்ச்சியொன்று இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் முன்னால் அமர்ந்திருக்கும் பாயிஸ் ஏதோ யோசனையில் அமர்ந்திருக்கின்றான். அவன் கவனம் தொலைக்காட்சியில் இல்லை.*

*அவ்வறைக்குள் வரும் அவன் தாய் ரைஹானா, அவன் யோசனையோடு அமர்ந்திருப்பதைக் கண்டு அருகில் செல்கின்றாள்.*

ரைஹானா : (அவன் தலையைத் தடவியவாறு) என்ன பாயிஸ்..... கடுமையான யோசன!

பாயிஸ் : ஆங்.... (சமாளித்தவாறு) ஒண்ணுமில்லம்மா...

ரைஹானா : டீ.விக்கு முன்னால இருந்து கொண்டு அதக்கூடப் பாக்காம இருக்கிறியே.... ஏதோ விஷயம் இருக்கோணும். என்னென்டு சொல்லு பாயிஸ்..

பாயிஸ் : ஒரு சின்னப் பிரச்சினம்மா......

ரைஹானா : பிரச்சினயா...? யாரோட.....?

பாயிஸ் : றியாஸ் மச்சானோட.

ரைஹானா : றியாஸ் அப்பதைய வந்திருந்தானே... அப்படி என்ன பிரச்சின உங்கரெண்டு பேருக்கும்?

பாயிஸ் : பெரிசா ஒரு பிரச்சினயும் இல்லம்மா. றியாஸ் மச்சான் எங்கட டியூட்டரி யில ஒரு சான்ஸ் தரச்சொல்லிக் கேட்கிறார்.

ரைஹானா : முடியுமென்டா ஒரு சான்ஸ் கொடுங்களன்.

பாயிஸ் : அத நான் மட்டும் முடிவு செய்ய முடியாதே உம்மா. கோபியோடயும் கதைக்கோணுமே.

ரைஹானா : கோபியோட கதைச்சுப் போட்டுச் சொல்லன்.

பாயிஸ் : அப்படித்தாம்மா சொன்னேன், ஆனா... மச்சான் கோபியப்பத்திக் கூடாத மாதிரிப் பேசிப்போட்டுப் போயிட்டார்.

ரைஹானா : (அதிர்ச்சியுடன்) என்ன! கோபியப்பத்தி என்ன சொன்னான்?

பாயிஸ் : இனத்த இழுத்துப் பேசினாருமா.....

ரைஹானா : அவன் எப்பவும் அப்படித்தான் டக்கென்டு கோபம் வந்திடும். அதோட துவேஷ உணர்வும் கூட. (தனக்குள் முணுமுணுப்பாக) இப்படிச் சொல்லிப் போட்டானே... சே... (பின்பு கோபியைப் பார்த்து) சரி.. சரி.. நீ இதப்பத்தி கோபிக்கிட்ட சொல்லிப்போடாத. கவலைப் படுவான். கோபியோட கதைச்சுப் பாரு. அவன் சரியென்டா மச்சானுக்கு ஒரு சான்ஸ் கொடு. (போகத் திரும்பி, நின்று) இல்ல.. இல்ல... மச்சானுக்கு முடியாதென்டு சொல்லியிடு. அதான் நல்லது.

பாயிஸ் : (ஆச்சரியமாக) என்னம்மா..முதல்ல சான்ஸ் கொடுக்க கோபி சம்மதிச்சா கொடுக்கச் சொன்னீங்க. பிறகு வேணாங்கிறீங்க......

ரைஹானா : றியாஸ டியூட்டரிக்குள்ள எடுக்காம இருக்கிறது தான் நல்லது.

பாயிஸ் : ஏம்மா..?

ரைஹானா : இப்படித் துவேஷம் பாக்கிறவன உள்ளுக்கு எடுத்தா எப்பவுமே பிரச்சினையாத்தான் இருக்கும். ஒத்துமையா படிப்பிக்கிற உங்க எல்லோரையும் பகையாளியாக்கிப்போடுவான்.

பாயிஸ் : அதுவும் சரிதாம்மா... ஆனா... முடியாதென்டு சொன்னாக் கோபிப்பாரே..

ரைஹானா : கோவிச்சா, கோவிக்கட்டும். நான் காக்காக் கிட்ட வேணுமென்டா சொல்றன். அவர் புரிஞ்சுக்குவார்.

பாயிஸ் : படிச்சவர், டீச்சரா இருக்கிறவர் ஏன் இப்படி நடந்து கொள்றாரோ தெரியயில்ல. ப்ச்... ஒருபக்கம் கவலையாவும் இருக்கு.

ரைஹானா : நாம கவலைப்பட்டு என்ன இருக்கு..? அவன் நடந்து கொள்ற முற சரியில்லையே.

*அப்போது அழைப்பு மணி ஒலிக்கிறது.*

ரைஹானா : யாரோ வந்திருக்காங்க. நான் போய்த் திறக்கிறன். நீ இதப்பத்திப் பெரிசாச் சிந்திக்காத.

*(ரைஹானா நடந்து, வாசலை நோக்கிச் செல்கின்றாள்)*

## காட்சி 11

இடம் : பூங்கா.
பாத்திரங்கள் : கோபி, (முன்பு காட்சி மூன்றில் வந்த) சொலமன்.
களம் : வெளிப்புறம்.

*கோபியும் சொலமனும் பூங்காவினுள் நடந்து செல்கின்றார்கள்.*

சொலமன் : ராத்திரி ரூபவாஹினியில போட்ட படம் பார்த்தனீரா?

*இருவரும், ஒரு, சீமெந்து ஆசனத்தில் அமர்கிறார்கள்*

கோபி : பார்த்தனான் சொலமன்.

சொலமன் : படம் ரொம்ப நல்லாருந்துது... இல்லையா..?

கோபி : படமாக்கப்பட்ட விதமும் தொழில் நுட்பங்களும் நல்லாயிருந்துது. ஆனா கதை எனக்குப் பிடிக்கயில்ல...

சொலமன் : ஏன் கோபி...?

கோபி : கதையில ஓர் இனத்தப் பத்திய தவறான கருத்துக்களக் கொடுத்திருக்கிறார் கதாசிரியர். அதனால தான்.

சொலமன் : ஓ.. முஸ்லிம்களைப் பத்தி சொல்லப்பட்டது பிழை என்கிறீரா?

கோபி : சொலமன், திரைப்படமென்டாலும் கதையென்டாலும் இனங்களுக்கு இடையில புரிந்துணர்வ ஏற்படுத்தோணுமே தவிர, பிரச்சினைகளக் கிளப்பிறதா இருக்கக்கூடாது.

சொலமன் : கதையில எந்தப் பகுதி உமக்குப் பிடிக்கயில்ல...?

கோபி : முஸ்லிம் பெண்ணும் இந்துப் பையனும் காதலிக்கிறாங்க. காதல் இனத்தப் பார்த்து வாரதில்ல. ஒத்துக் கொள்ளுறேன். ஆனா, முஸ்லிம்கள் துவேஷ உணர்வு மிக்கவை என்று அதில் சொல்லப்பட்டுள்ளத நான் வெறுக்கிறன்.

சொலமன் : எனக்கென்டா வித்தியாசமாத் தெரியயில்ல.

கோபி : பார்க்கிற பார்வையிலதான் சரியும் பிழையும் இருக்கு சொலமன். படத்தோட இயக்குநர் பல தரமான திரைப்படங்களத் தந்தவர். அவர் ஏன் இப்படிப்பட்ட சம்பவத்தைப் புகுத்தினார் என்டுதான் எனக்கு ஆச்சரியமா இருக்கு.

சொலமன் : நீர் முஸ்லிம் பெண்ணைக் காதலிச்சது பிழையென்கிறீரா கோபி?

கோபி : நான் சொல்றது உமக்குப் புரியல்ல சொலமன். காதலிச்சத நான் பிழையென்டு சொல்லயில்ல. ஓர் இனத்தக் குறைபாடு உள்ளவங்களாக் காட்டினதத்தான் பிழையென்கிறேன். ஏன்..? இப்படிச் சிந்திச்சுப் பாரன்... பெண்ணுடைய பக்கம் எதிர்ப்புக் குறைவாக் காட்டி பையனுடைய பக்கத்தாராகிய இந்துக்கள துவேஷ உணர்வு மிக்கவங்களாகவும் கொலை செய்யக் கூடத் தயங்காதவங்களாகவும் காட்டினா எங்கட ஆட்கள் ஏத்துக் கொள்ளுவினமோ? இல்ல தானே?

சொலமன் : (யோசனையோடு) நீர் சொல்றது சரிதான் ஒவ்வொரு இனத்தவரும் அடுத்தவரோட

பழகும் போது மொழியோ, மதமோ இடைஞ்சலா இருக்கக் கூடாது. அப்படி துவேஷம் பார்க்கும் போதுதான் பிரச்சினைகளே உருவாகுது. கதாசிரியர்கள், கவிஞர்கள், இயக்குநர்கள் இவ்விஷயத்த நல்லா உணர்ந்து செயற்படத்தான் வேண்டும்.

கோபி : என் கருத்த சரிகண்டதுக்கு நன்றி மச்சான். ஆனா அது என்னுடைய சொந்தக் கருத்து. அத எல்லோரும் சரி காணோனுமென்டு நான் எதிர்பார்க்க மாட்டன். எங்க கூட எத்தன முஸ்லிம் பொடியங்க படிக்கிறாங்க. ஏன்.. நீயும் நானும் கூட மதத்தால வேறுபட்டவங்க. நாங்களெல்லாம் சேர்ந்து பழகும் போது துவேஷம் வெளிப்படக்கூடாது என்கிறது தான் என்னோட கருத்து.

சொலமன் : எனக்கு நீயொரு கருவைத் தந்திட்டே மச்சான். இதவச்சு ஒரு கவிதை எழுதப் போறன். நேற்றய வீரகேசரியில இனப்புரிந்துணர்வுக்கான கவிதைப் போட்டியொன்டு வந்திருக்கிறது மச்சான், அதுக்கு அனுப்பப் போறன்.

கோபி : "விஷ் யூ ஓல் த பெஸ்ட்" சொலமன்.

## காட்சி 12

இடம் : பாயிஸின் வீடு.
பாத்திரங்கள் : பாயிஸ், ரகுமான்,
(முன்பு காட்சி 3இல் வந்த) சுஜப்.
களம் : உட்புறம்.

*பாயிஸ், ரகுமான், சுஜப் ஆகிய மூவரும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கின்றனர். (தொலைக்காட்சியின் திரை கமராவுக்குத் தெரியக் கூடாது. பாயிஸ், ரகுமான், சுஜப் ஆகியோரின் முகங்கள் தான் தெரிய வேண்டும்).*

*தொலைக்காட்சியிலிருந்து திடீரென்று பலத்த கோஷம் கேட்கின்றது.*

ரகுமான் : சே..... பாகிஸ்தான் வீரர்ங்க இவன அவுட்டாக்க மாட்டேங்கிறாங்களே..

*அவ்வேளை பாயிஸும் சுஜபும் ஒருவர் முகத்தை அடுத்தவர் பார்த்து, புன்முறுவல் பூக்கின்றனர்.*

*சிறிது நேரத்தில் மீண்டும் பலத்த கோஷம்!*

ரகுமான் : சே... இன்னொரு ∴போ ரன்ஸ்.

*பாயிஸும் சுஜபும் மீண்டும் புன்சிரிப்பை உதிர்க்கின்றனர். சிறிது நேரத்தில் மீண்டும் பெரும் கோஷம்!*

ரகுமான் : ஓஹ்... ஆள் அவுட்.... ஸுபர் கெட்ச்

*ரகுமான் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்கின்றான்.*

பாயிஸ் : (கோபத்தோடு) ஏன்டா, இப்படி சந்தோஷப்படறே..?

ரகுமான் : ஏன்டா, நான் பாகிஸ்தான் ஆதரவாளர் தெரியுந்தானே....

பாயிஸ் : பாகிஸ்தானுக்கு ஆதரவு கொடு. ஆனா இலங்கையும் பாகிஸ்தானும் விளையாடும் போது பாகிஸ்தானுக்கு ஸபோட் பண்ணாத மச்சான்.

ரகுமான் : விரும்பிற அணிக்கு ஸபோட் பண்ணக்கூடிய உரிம ஒவ்வொருத்தனுக்கும் இருக்கு மச்சான்.

சுஜப் : அந்த உரிம இல்ல என்டு சொல்லயில்ல. ஆனா, நீ பாகிஸ்தான ஆதரிக்கிறது மதத்தை இடிப்படையா வச்சு. அவங்களும் நம்மோட மதத்த சேர்ந்தவங்களென்டு தான் நீ அவங்கள ஆதரிக்கிறே. மதத்தப் பார்த்து ஆதரிக்கிறதத்தான் பிழை என்டு சொல்றோம்.

ரகுமான் : சரி நீங்க சொல்ற மாதிரி நான் செய்யிறது பிழையென்டு வச்சுக் கொள்ளுவோம். நான் கேக்கிற கேள்விக்கு நீங்க பதிலச் சொல்லுங்க பார்ப்போம். எங்கட அணியில ஒரு முஸ்லிம் வீரருக்குக் கூட சந்தர்ப்பம் கொடுக்கயில்லயே அது ஏன்...?

சுஜப் : அதனால நீ செய்யிறது சரியாயிடுமா மச்சான்?

ரகுமான் : எல்லா விஷயங்களுக்கும் இன விகிதாசாரம் பார்க்கிற போது இதில மட்டும் ஏன் பார்க்கப்படயில்ல? அண்மையில வீரகேசரி ஆசிரியர் தலையங்கத்தில கூட, இன விகிதாசார அடிப்படையில எம்மட அணியில இன்னொரு தமிழ் வீரருக்கும் முஸ்லிம் வீரருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கோனுமென்டு கூறப்பட்டிருந்துது. அதன்படி செய்யாமலிருப்பது எதனால? நல்ல விளையாட்டு வீரர் இல்லையென்டு சொல்லுவீங்க.

அது பிழை. டெஸ்ட்போட்டி களில திறமையா விளையாடிய நல்ல தமிழ், முஸ்லிம் பிளேயர்ஸ் இருக்கிறாங்க. அவங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன? நமக்கும் சந்தோஷமா இருக்கும் தானே?

பாயிஸ் : நான் ஒத்துக் கொள்றேன். முறைப்படி தமிழ் பிளேயர்ஸுக்கும் முஸ்லிம் பிளேயர்ஸுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படயில்ல தான். அது தவறுதான். அதுக்காக நாம கட்சி மாறுறதா? நாம கட்சி மாறி ஸபோட் பண்ணிறதால இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைச்சிடுமா? கிடைக்காது. அதனால, சம்பந்தப் பட்டவங்களுக்கு கடிதம் மூலம் தெரியப் படுத்தினா இதுக்கொரு தீர்வு கிடைக்கும். அதத்தான் நாம செய்யோணுமே தவிர, ஏட்டிக்குப் போட்டியா நடந்து கொள்ளக் கூடாது.

ரகுமான் : நீ சொல்ற மாதிரி இதுக்கு அவ்வளவு சுலபமா தீர்வு கிடைச்சிடாது மச்சான்.

பாயிஸ் : நான் நம்புறேன்... ரகுமான்... இன்னொரு விஷயத்தையும் நாம சிந்திக்க வேணும். சில இடங்களில பாகிஸ்தானோட அல்லது இந்தியாவோட விளையாடி இலங்கை தோத்துப்போனா வெடி கொழுத்துறாங்க. இதால பெரும்பான்மை சமூகம் எம்ம விரோதிகளா நினைக்காதா? இனங்களுக்கு இடையில குரோதம் ஏற்படாதா?

சுஜப் : நாம எப்பவுமே தேசிய உணர்வோட செயற்படோணும் ரகுமான்.

ரகுமான் : சரி... பாயிஸ், நீ வடபகுதி மாணவர் சங்கத்தில அங்கத்தவனா இருக்கிறியே. அதன் மூலம் சம்பந்தப்பட்டவங்களுக்கு கடிதம் எழுதிப்போடு. நமக்குள்ள வீணா சண்ட பிடிப்பானேன்? விளையாட்டப் பார்ப்போம்.

*இப்போது கமராவில் தொலைக்காட்சித் திரை தெரிகிறது. ஏதோ ஒரு விளம்பரம் ஒளிபரப்பப் படுகிறது.*

## காட்சி 13

இடம் : பாயிஸின் வீடு.
பாத்திரங்கள் : பாயிஸ், கோபி, அப்துல் ரஸாக், ரைஹானா.
களம் : உட்புறம்.

*பாயிஸ் தனது படிக்கும் அறையில் உட்கார்ந்து, பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கின்றான். அப்பொழுது அழைப்பு மணி ஒலிக்கிறது. பாயிஸ் சென்று கதவைத் திறக்கிறான். வெளியே கோபி நிற்கிறான். அவன் கையில் ஒரு சிறு பெட்டி இருக்கிறது.*

பாயிஸ் : உள்ள வா கோபி.

*இருவரும் பாயிஸின் படிக்கும் அறைக்குள் சென்று அமர்கின்றனர்.*

கோபி : பாயிஸ்.. ஒரு மகிழ்ச்சியான செய்தி.

பாயிஸ் : என்ன செய்தி கோபி?

கோபி : அதைக் கேட்டா நீ ரொம்பவும் சந்தோஷப் படுவே.

பாயிஸ் : (விடயத்தை அறியும் ஆவலுடன்) என்ன.. பீடிகையோட ஆரம்பிக்கிறே... உனக்குக் கல்யாணம் ஏதாவது பேசியிருக்கிறாங்களா?

கோபி : (பாயிஸைச் செல்லமாக அடிக்கக் கையை உயர்த்தி) ஆளப்பாரன் ஆள... கல்யாணமாம் கல்யாணம்...

பாயிஸ் : சரி, ஐயாவுக்குக் கல்யாணம் இப்பைக்குத் தேவையில்ல. வேற என்னவா இருக்கும்?

(ஏதோ ஞாபகம் வந்தவனாக) அட... இந்த வருஷமும் ஃபோர் ஏ எடுத்தவங்களயும் ஜனாதிபதி விருந்துபசாரத்துக்கு அழைக்கலாம் என்டு சொல்லியிருந்தியே... அதுக்கு அழைப்பு வந்திருக்குதா?

கோபி : ரொம்பச் சரியா கண்டு பிடிச்சிட்டே.

பாயிஸ் : (சந்தோஷத்தோடு கோபியின் கைகளைக் குலுக்கி) கொங்கிராஜுலேஸன்ஸ்...... கொங்கிராஜுலேஸன்ஸ்.....

கோபி : தேங்க் யு பாயிஸ். அன்ரியும் அங்கிளும் இல்லயா?

பாயிஸ் : (சத்தமாக) உம்மா! வாப்பா! இங்க வாங்களன். ஒரு சந்தோஷமான விஷயம்.

*அப்துல் ரஸாக்கும் ரைஹானாவும் வருகிறார்கள்*

பாயிஸ் : கோபிக்கு ஜனாதிபதியச் சந்திக்கிறதுக்கும், ஜனாதிபதி விருந்தில கலந்து கொள்றத்துக்கும் அழைப்பு வரலாமென்டு சொன்னேனல்லவா? இப்ப அழைப்பு வந்திருக்கு.

ரஸாக் : அப்படியா! ரொம்ப சந்தோஷமாயிருக்கு.

ரைஹானா : உன்னட நல்ல மனசுக்கேத்த மாதிரியே எல்லாம் நடக்குது. அம்மா அப்பாவெல்லாம் ரொம்பவும் சந்தோஷப் பட்டிருப்பாங்களே?

*கோபி புன்சிரிப்புச் சிரித்து ஆமோதிக்கின்றான். தனது கையில் வைத்திருக்கும் பெட்டியைத் திறக்கின்றான்.*

கோபி : (பெட்டியை அப்துல் ரஸாக்கிடம் நீட்டி) ஸ்வீட்ஸ் எடுங்க அங்கிள்.

*அப்துல் ரஸாக் எடுக்கிறார். அடுத்து ரைஹானாவிடம் நீட்ட, அவளும் எடுக்கிறாள். அடுத்து பாயிஸிடம் நீட்ட அவனும் எடுக்கிறான்.*

கோபி : முதன் முதலா உங்களுக்குச் சொல்லோணு மென்டு தான் ஓடி வந்தனான். என்னட மத்த ஃரெண்ட்ஸ் மாருக்கும் றிலேஷன்ஸ்ஸுக்கும் சொல்ல வேணும். நான் போய்ட்டுவாரன்.

*கோபி வெளியேறுகின்றான்.*

ரைஹானா : நல்ல பிள்ள... பாயிஸ் மேலயும் நம்ம மேலயும் எவ்வளவு அன்பு வச்சிருக்கான்!

## காட்சி 14

இடம் : பாயிஸின் வீடு, கோபியின் வீடு.
பாத்திரங்கள் : பாயிஸ், தர்மராசா, சரோஜா.
களம் : உட்புறம்.

*தனது வீட்டு முன்னறையிலிருந்து, பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கும் பாயிஸ், ஒரு பக்கத்தைப் புரட்டுகின்றான். அதில் ஒரு செய்தியைக் கண்ணுற்று, அவசர அவசரமாக அப்பத்திரிகையை எடுத்துக் கொண்டு கோபியின் வீட்டுக்கு ஓடுகின்றான். கோபியின் வீட்டு முன்னறையில் தர்மராசாவும், சரோஜாவும் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.*

பாயிஸ் : (சந்தோஷத்துடன்) அங்கிள்... அன்ட்ரி..... பேப்பர்ல கோபியோட பேட்டி வந்திருக்குது.

தர்மராசா, சரோஜா : (சந்தோஷத்துடன்) கோபியோட பேட்டியா?

பாயிஸ் : ஓம். கண்டோனா எடுத்துக் கொண்டு ஓடி வாறன். வாசிக்கிறேன். கேக்கிறீங்களா?

தர்மராசா, சரோஜா : உம்...

பாயிஸ் : (பத்திரிகையைப் பார்த்து) நாடு முழுவதிலும் நான்கு அதி திறமைச் சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு, ஜனாதிபதி, நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில், விருந்தொன்று அளித்தார். அவ்விருந்தில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு ஜனாதிபதி ஞாபகப் பரிசுகளையும் வழங்கி கௌரவித்தார். விருந்திற்கு அழைக்கப்பட்ட மாணவர்களில், வடபகுதியிலிருந்து வந்திருந்த மாணவர்கள் சிலர் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அவர்களிற் சிலபேரைப் பேட்டி கண்டோம்.

*கோபி.*

*இவர் உயிரியல் விஞ்ஞான பிரிவில் நான்கு அதி திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளார். இவர் திரு.ஆர்.தர்மராசா, திருமதி. சரோஜா தர்மராசா தம்பதிகளின் புதல்வராவார்.*

- உங்களுடைய பாடசாலை எது?

  யாழ் இந்துக் கல்லூரி

- உங்கள் இலட்சியம்?

  ஒரு சிறந்த டொக்டராக வருவது.

- உங்களைப் போன்ற மாணவர்களுக்கு என்ன கூற நினைக்கின்றீர்கள்?

  மாணவர்கள் யாவரும் படிக்கும் காலங்களில் வேறு விடயங்களில் கவனம் செலுத்தாது படித்து,உயர்வடைய வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோள்.

- உங்களுடைய பெற்றோரைப் பற்றி...?

  அதைத்தான் நானும் நினைத்தேன் எங்கே கேட்காமல் விட்டு விடுவீர்களோவென்று... (சிரிப்பு) "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்" என்றும் "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். எனது உயர்வுக்கு எனது பெற்றோரின் பங்கு அளப்பரியது. இதற்காக நான் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு ஊழியம் செய்தாலும் கடன் தீராது. என் பெற்றோரின் மனம் குளிரும் வண்ணம் வாழ்வதையே நான் விரும்புகின்றேன்

மேற்கண்டவாறு கூறிய கோபி, நல்லொழுக்கமுள்ள மாணவர். அவர் மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

*பாயிஸ் நிறுத்தி பத்திரிகையை மடித்தான். தர்மராசாவின் கண்களிலும் சரோஜாவின் கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் அரும்பின.*

## காட்சி 15

இடம் : பாயிஸின் வீடு, தெரு, ஆஸ்பத்திரி.
பாத்திரங்கள் : பாயிஸ், ரைஹானா, சரோஜா, தர்மராசா, ஓட்டோக்காரன், வைத்தியர், தாதி, இதர ஆஸ்பத்திரி ஊழியர்கள், (முன்பு காட்சி 4இல் வந்த) வரதராஜன்.
களம் : உட்புறம், வெளிப்புறம்.

*பாயிஸ் உடை அணிந்து கொண்டிருக்கின்றான். அப்பொழுது அழுது கொண்டு ஓடி வருகின்றாள் சரோஜா.*

சரோஜா : (பதற்றம், அழுகையுடன்) பாயிஸ்...
பாயிஸ் : (திடுக்கிட்டுத் திரும்பி) அன்ட்ரி! என்ன இது!
சரோஜா : பாயிஸ்... அங்கிளுக்கு.... அங்கிளுக்கு...

*இதற்குள் ரைஹானாவும் அங்கு வந்து சேர்ந்து விடுகின்றாள்.*

ரைஹானா : சரோ அக்கா! அவருக்கு என்ன..?

சரோஜா : அவர் அக்ஸிடன்ட் பட்டிட்டாராம். ஹொஸ்பிடல்ல அட்மிட் பண்ணி இருக்காங்களாம்... இப்ப கோல் வந்துது.
பாயிஸ் : அன்ட்ரி... நீங்க ஒண்ணுக்கும் பயப்படாதீங்க இதோ, நான் ஹொஸ்பிடலுக்குப் போறன்..

*பாயிஸ் அவசரமாக வெளியேற முனைகின்றான்.*

சரோஜா : நானும் வாரன் பாயிஸ்

*அவளும் புறப்படுகிறாள்.*

ரைஹானா : ஒண்ணுக்கும் பயப்படாதீங்க சரோ அக்கா எல்லாம் நல்லபடியா முடியும்.

*பாயிஸ் வாசலுக்கு வந்து, வீதியில் சென்று கொண்டிருக்கும் ஓர் ஓட்டோவை மறிக்கின்றான். சரோஜாவும் பாயிஸும் ஏறியவுடன் ஓட்டோ புறப்படுகின்றது.*

*ஓட்டோ சாரதி ஏதோ கேட்க, பாயிஸ் பதில் கூறுகின்றான்.*

*ஓட்டோ ஆஸ்பத்திரிக்குச் செல்கின்றது. பாயிஸ் பணம் கொடுத்து, ஓட்டோ வைத் திருப்பி அனுப்புகின்றான். சரோஜாவும் பாயிஸும் அக்ஸிடன்ட் வோட்டை நோக்கி ஓடுகின்றார்கள். அங்கே தர்மராசா இல்லை. ஆனால் சரோஜாவின் மருமகன் வரதராஜன் அவர்களை நெருங்கி வருகின்றான்.*

வரதராஜன்: மாமி... மாமா ஒபரேஸன் தியேட்டரில இருக்கிறார். மைனர் ஒபரேஸன் ஒண்ணு செய்யணுமாம். உடனடியா ரத்தம் தேவ. என்னோட ரத்தம் பொருந்த மாட்டேங்குது.

பாயிஸ் : அப்படியா..? நான் கொடுக்கிறன்...

*பாயிஸ் அவ்வழியால் செல்லும் தாதியொருத்தியிடம் ஏதோ கூறுகின்றான். அவள் அவனை வைத்தியரிடம் அழைத்துச் செல்கின்றாள். அங்கு பாயிஸின் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்க்கின்றார்கள். பின்பு, பாயிஸை அழைத்துச் சென்று இரத்தம் எடுக்கின்றார்கள். அது தர்மராசாவின் உடலில் ஏறுகிறது.*

## காட்சி 16

இடம் : ஆஸ்பத்திரி

பாத்திரங்கள் : சரோஜா, தர்மராசா, பாயிஸ், வரதராஜன் (முன்பு காட்சி 4இல் வந்த) சுசீலா.

களம் : உட்புறம்

*தர்மராசா கட்டிலில் படுத்திருக்கிறார். அவருடைய வலது காலிலே கட்டுப் போடப் பட்டிருக்கின்றது. அவரைச் சுற்றி சரோஜா, பாயிஸ், வரதராஜன். சுசீலா ஆகியோர் நிற்கின்றார்கள். தர்மராசா அனைவரையும் பார்த்துப் புன்னகைக்கிறார்.*

தர்மராசா : தலையோட போக வேண்டிது தலைப்பாகையோட போயிட்டுது.

சரோஜா : நான் கேள்விப் பட்டோன பயந்து நடுங்கிட்டனான்.

சுசீலா : கோபிக்கு அறிவிச்சாச்சதா அம்மா?

சரோஜா : இல்ல... அவன் பயந்திடுவான் என்டு சொல்லேல்ல. நாளைக்கு வந்திடுவான் தானே.

தர்மராசா : என்னோட உடல்ல பாயிஸோட ரத்தம் ஓடுறதாலயோ என்னவோ வாலிபம் திருப்புற மாதிரி இருக்கு.

*அனைவரும் சிரிக்கிறார்கள்.*

சரோஜா : கோபியும் இல்லாத நேரத்துல பாயிஸ் ரொம்ப உதவியா இருந்தவன். பாயிஸோட உதவிய என்டைக்கும் மறக்கேலாது.

பாயிஸ் : இது என்ன பெரிய உதவி அன்ட்ரி...? அடுத்த வங்களுக்கு ஏதாவது ஒண்டு ஆகிட்டெண்டா உதவி செய்ய வேண்டியது கடமதானே.

*அப்பொழுது பார்வையாளர் வெளியேற வேண்டிய நேரத்தை உணர்த்தும் மணி ஒலிக்கிறது.*

தர்மராசா : உந்தா மணி அடிக்குது.... நீங்க போய்ட்டு வாங்கோ.

சரோஜா : கரியர்ல சாப்பாடு இருக்கு. நேத்துச் செய்ததப் போல சாப்பிடாம அப்படியே வச்சிடாம எடுத்துச் சாப்பிடுங்கோ.

தர்மராசா : வீட்டில தான் உம்மோட சாப்பாட்டச் சாப்பிட்டு நாக்குச் செத்துப் போச்சு. இங்கயாவது நிம்மதியா இருப்போம்னு பார்த்தா விடமாட்டேங்கிறீரேப்பா.

*அனைவரும் சிரிக்கிறார்கள்.*

சரோஜா : சொல்லுவீங்க, சொல்லுவீங்க. வீட்டுக்கு வந்தோன சரோ அது செய்து தாறீரோ இது செய்து தாறீரோன்னு கெஞ்சுவீங்க.

*மீண்டும் அனைவரும் சிரிக்கிறார்கள்.*

சுசீலா : அப்பா.... போய்ட்டு வாறோம்பா.

*தர்மராசா அனைவருக்கும் விடைகொடுக்கிறார். அவர்கள் வெளியேறுகிறார்கள்.*

## காட்சி 17

இடம் : கல்வி நிறுவனம்

பாத்திரங்கள் : பாயிஸ், கோபி, மாணவர் சிலர், சிவா ஆசிரியர்கள்.

*பாடம் நடைபெறாத ஒரு வகுப்பறையில் அமர்ந்திருந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கின்றான் பாயிஸ். அவன் முதுகுக்குப் பின்னால் தூரத்தில் ஒரு வகுப்பில் மாணவர் சிலர் அமர்ந்திருப்பதும், சிவா ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருப்பதும் தெரிகின்றது.*

*அப்பொழுது அங்கே கோபி வருகின்றான். பாயிஸ், கோபி வந்ததைக் கவனிக்கவில்லை. கோபி, சிறிது நேரம் பாயிஸைப் பார்க்கின்றான். பின்பு தலையை ஆட்டியவனாக வெளியே செல்கின்றான். சென்று, கதவில் தட்டி, குரல் கொடுக்கின்றான்.*

கோபி : உள்ளே வருகை தரலாமா?

*பாயிஸ் நிமிர்ந்து பார்க்கின்றான். கோபி நிற்பதைக் கண்டுகொள்கின்றான்.*

பாயிஸ் : வட் எ ஸேப்ரைஸ்... எப்ப வந்தே கோபி?

கோபி : இப்பத்தான் மச்சான் வந்தனான்.

*இருவரும் உள்ளே சென்று அமர்கின்றார்கள்.*

பாயிஸ் : ஐயாவோட பேட்டி பேப்பரிலயெல்லாம் வந்திருந்துதே.

கோபி : ஓம் மச்சான். ரொம்ப மகிழ்ச்சியா இருந்துது. அது சரி மச்சான். அப்பா அக்ஸிடன்ட் ஆன விஷயத்த நீங்க யாருமே எனக்கு கோல் பண்ணிச் சொல்லவ இல்லையே...

பாயிஸ் : சொன்னா உன்னட மனநிலை பாதிக்கப் பட்டிடும்னு தான் மச்சான் சொல்லயில்ல.

கோபி : வந்தோன அம்மா சொன்னவ. போய்ப் பார்த்துப் போட்டுத்தான் இங்க வாரனான்.

*அதற்குள், தூரத்தில் கற்பித்துக் கொண்டிருந்த சிவா ஆசிரியர் கோபி வந்ததைக் கண்டு விட்டு, இவர்களை நோக்கி வருகின்றார். (சிவா ஆசிரியரும் கோபி, பாயிஸ்'டைய வயதை ஒத்தவர்தான்)*

ஆசிரியர் : வாழ்த்துக்கள் கோபி. நாங்களெல்லாம் உம்மட பேட்டியப் பார்த்து சந்தோஷப் பட்டனாங்க. நீர் வந்தோன கூட்டி வரச் சொல்லி அம்மா சொல்லிக் கொண்டிருந்தா. இன்டைக்கு வீட்டுக்கு வரேலுமா?

கோபி : இன்டைக்கு கொஞ்சம் கஸ்டம் சிவா. நாளைக்கு பின்னேரம் போல வாரேனே.

ஆசிரியர் : நல்லது... பிள்ளையள் வெயிட் பண்றாங்க நான் கிளாஸ் எடுக்கிறன்.

*அந்த ஆசிரியர் மீண்டும் கற்பிக்கச் செல்கிறார். கோபி, முன்பு பாயிஸ் படித்துக் கொண்டிருந்த (மேசை மேலிருக்கும்) புத்தகத்தைப் பார்க்கின்றான்.* பழகும் போது மொழியோ, மதமோ *'இவான் துர்கேனிவ்' வின் 'மூன்று காதல் கதைகள்' என்ற புத்தகம் அது.*

கோபி : புத்தகம் எப்படி மச்சான்...?

பாயிஸ் : பரவாயில்ல. நல்ல கதைதான். ஆனா இத எல்லாரும் விரும்பி வாசிக்க மாட்டாங்க.

கோபி : 'இவான் துர்கேனிவ்' ரஷ்ய எழுத்தாளர் தானே?

பாயிஸ் : ஓம். இவரோட நூல்கள்ல 'ஆஸ்யா',

'முதல் காதல்' , 'வசந்த கால வெள்ளம்' ஆகியவை புகழ் பெற்றவை.

கோபி : நான் 'ஒஸ்திரோவ்ஸ்க்கிய்' , 'மக்ஸீம் கோர்க்கி' போன்ற ரஷ்ய எழுத்தாளர்களோட கதைகளைப் படிச்சிருக்கிறனான். ஆனா.. 'இவான் துர்கேனிவ்' வின் கதைகளைப் படிக்கயில்ல. படிச்சுப் போட்டுத் தாருமன் இந்தப் புத்தகத்த.

பாயிஸ் : இன்னுஞ்சில பக்கங்கள் தான் படிக்க வேண்டியிருக்கு. இன்டைக்கே முடிச்சிடுவன். ராவைக்குத் தாரன்.

*அப்பொழுது தொடர்ச்சியாக வேட்டுச் சத்தம் கேட்கிறது.*

கோபி : என்ன மச்சான்.... சூட்டுச் சத்தம் கேக்குது.

*மீண்டும் தொடர்ச்சிய~கக் கேட்கிறது.*

பாயிஸ் : கோட்டைப் பக்கமிருந்துதான் மச்சான் கேக்குது. பழையபடி பிரச்சின தொடங்குதே தெரியயில்ல....

*கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் இவர்களை நோக்கி வருகிறார்.*

ஆசிரியர் : என்ன செய்வோம்....? பிள்ளையள வச்சுக் கொண்டிருக்கிறது நல்லதில்ல....

கோபி : அனுப்பிடுறது தான் நல்லது. இல்லையா?

பாயிஸ் : ம்... அனுப்பிடுங்க...

*ஆசிரியர் சென்று பிள்ளைகளிடம் ஏதோ கூறுகிறார். பிள்ளைகள் வரிசையாக வெளியேறுகிறார்கள். வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றன.*

## காட்சி 18

இடம் : கோபியின் வீடு.
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ், வேலுப்பிள்ளை ஆசிரியர்.
களம் : உட்புறம்.

*கோபியின் வீட்டில், கோபியும் பாயிஸ்"ம் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அங்கே வேலுப்பிள்ளை ஆசிரியர் வந்து ஆசனத்தில் அமர்கிறார்.*

ஆசிரியர் : என்ன கோபி... அப்பா அம்மா இல்லையா?

கோபி : அக்கா வீட்டுக்குப் போய்ட்டாங்க.

ஆசிரியர் : ஏதேனும் விசேஷமோ?

கோபி : அக்காவுக்கு குழந்த கிடைச்சிருக்கு.

ஆசிரியர் : (சந்தோஷத்துடன்) அப்படியா? அப்ப சரோ பாட்டியா போய்ட்டான்னு சொல்லு. என்ன குழந்த?

கோபி : பெண் குழந்த.

ஆசிரியர் : போகும் போது பார்த்திட்டுப் போகலாம்.

*வேலுப்பிள்ளை ஆசிரியர் தான் கொண்டு வந்த பையினுள்ளிருந்து ஓர் அழைப்பிதழை எடுக்கிறார்.*

ஆசிரியர் : (அதை கோபியிடம் நீட்டி) என்னட கடசி மோளுக்குக் கல்யாணம்... வார பதினஞ்சாம் தேதி... உதக் கொடும்... நீரும் கட்டாயம் வர வேணும்...

*(பாயிஸின் பக்கம் திரும்பி) உம்ம குடும்பத்துக்கும் ஒரு காட் இருக்கு... வீட்டில அப்பா அம்மா இருக்கிறாங்க தானே...?*

பாயிஸ் : ஓம் ஸேர்

ஆசிரியர் : நான் வீட்டுக்குக் கொண்டு வந்தே தாரனான். அதுதான் மரியாத. (ஏதோ ஞாபகம் வந்தவராக) அது சரி தம்பியள்... டியூட்டரியெல்லாம் எப்படி நடக்குது...?

பாயிஸ் : நல்லா நடக்குது ஸேர்.

கோபி : நடக்கேல்ல. ஓடுது.

*மூவரும் சிரிக்கிறார்கள்*

ஆசிரியர் : உங்கட கட் ஓ·்ப் மார்க்ஸ் எல்லாம் எப்ப வரும்?

கோபி : இந்த மாசம் வரலாம்.

ஆசிரியர் : கட் ஓ·்ப் மார்க்ஸ் வந்தோன உங்கட யூனிவர்ஸிடி தொடங்கிடுமென்டு நேத்து ஒரு பையன் சொன்னவன். நெசம் தானோ?

பாயிஸ் : இல்ல ஸேர்... கட் ஓ·்ப் மார்க்ஸ் வந்து ஒரு சில மாதங்களுக்குப் பிறகுதான் கெல்ட் வகுப்புத் தொடங்கும். அது ஆறு மாசம் நடக்கும். அது முடிஞ்சு மூணு நாலு மாசத்துக்குப் பிறகுதான் யூனிவர்ஸிடி தொடங்கும்.

ஆசிரியர் : அதானே பார்த்தனான்... இந்த முற வெள்ளெனத் தொடங்குதானாக்குமென்டு நினச்சனான்... படிக்கிற பிள்ளையளோட காலமெல்லாம் இப்படியே வீணாக் கழியுது... ம்... (பெருமூச்சு விட்டு) என்ன செய்யிறது...?

பாயிஸ் : வெளிநாடுகள்ல ஒவ்வொருத்தனும் பதினெட்டு வயசில டிகிரி முடிச்சு சாதன படைக்கிறான்.

ம்.. என்ன செய்யிறது... எதிர்காலத்தில இந்தப் பிரச்சினய இல்லாமச் செய்யிறதுக்காக புதிய யூனிவர்ஸிடிகள்கட்டிற முயற்சிகள் நடக்குது... எங்களுக்கு இல்லாட்டியும் எங்களுக்குப் பிறகு வாற மாணவர்களுக்காவது வெயிட்டிங் இல்லாட்டிச் சரி.

*அப்பொழுது தொலைவில் வேட்டுச் சத்தங்கள் முழங்குகின்றன.*

ஆசிரியர் : என்ன தம்பியள்... பழயபடி பிரச்சின தொடங்குது போலேருக்கு... நேத்தும் சூட்டுச் சத்தங்கள் கேட்டுது... போர நினைக்க பயமா இருக்கு.

*வேட்டுச் சத்தங்கள் அதிகரிக்கின்றன. வானத்தில் ஹெலிகொப்டர் விமானங்கள் பறக்கும் சத்தம் கேட்கின்றது.*

கோபி : உது நல்லதுக்காத் தெரியயில்ல... பெரியவொரு சண்டதான் ஆரம்பிக்கப்போகுது.

*ஹெலிகொப்டர் விமானங்களிலிருந்து சுடும் சத்தங்கள் கேட்கின்றன. சிறிது நேரத்தில் எல்லாம் அடங்கிவிடுகின்றன.*

ஆசிரியர் : சரி, இருங்கோ தம்பயள்... நான் இன்னும் பலருக்கு காட் கொடுக்க வேணம்... (பாயிஸைப் பார்த்து) உம்மட வீட்டில கொடுத்திட்டுப் போறன்... நீரும் கட்டாயம் வர வேணும்.

பாயிஸ் : இன்ஷா அல்லாஹ்... (இறைவன் நாடினால் என்ற அரபுப்பதம்) வாரன் ஸேர்.

*ஆசிரியர் வெளியேறுகிறார்.*

## காட்சி 19

இடம் : பாயிஸின் வீடு.
பாத்திரங்கள் : பாயிஸ், சுஜப்.
களம் : உட்புறம்.

*பாயிஸும், சுஜபும் பாயிஸின் வீட்டு வாசலில் நின்று, அழைப்பு மணியை அழுத்துகிறார்கள். கதவை ரைஹானா திறக்கின்றாள்.*

ரைஹானா : உள்ள வாங்க. சுஜபு... வீட்டில எல்லாரும் சுகமா இருக்கிறாங்களா?

சுஜப் : அல்லாட காவலா சுகமா இருக்கிறாங்க.

ரைஹானா : கதைச்சுக் கொண்டிருங்க... தேத்தண்ணி கலக்கிக் கொண்டு வாரன்.

*ரைஹானா உள்ளே செல்கின்றாள். பாயிஸும், சுஜபும் பாயிஸின் அறைக்குள் நுழைகின்றனர்.*

பாயிஸ் : சுஜபு... அண்டைக்கு ஏதோ அவசரமெண்டு பத்தாயிரம் ரூவா கைம்மாத்தா தரேலுமா என்டு கேட்டியல்லவா? யாரிட்டயாவது வாங்கினியா?

சுஜப் : ப்ச்... ஒண்ணும் சரிவரயில்ல மச்சான்.

பாயிஸ் : கைம்மாத்தா தந்தா உன்னால எப்ப திருப்பித் தரேலும்?

சுஜப் : இன்ஷா அல்லாஹ், வார மாசம் காக்கா சவுதியில இருந்து அனுப்புவார். அனுப்பினோன தந்திடுறேன்.

பாயிஸ் : எனக்கொரு வழியில காசு கிடச்சுது. நான் உனக்குக் காசு தாரன்.

ஆனா யாரிட்டயும் சொல்லிடக் கூடாது. சரியா...?

சுஜப் : சரி பாயிஸ்.

*பாயிஸ் எழுந்து சென்று, தனது அலுமாரிக்குள் வைத்திருக்கும் பணத்தை எடுத்துக் கொடுக்கின்றான். சுஜப் அதைத் தன்னுடைய சட்டைப் பொக்கற்றுக்குள் வைக்கின்றான்.*

சுஜப் : இந்த உதவிய நான் என்டைக்கும் மறக்க மாட்டேன் பாயிஸ்.

பாயிஸ் : இதில என்ன மச்சான் இருக்கு நம்மால அடுத்தவனுக்கு உதவி செய்ய முடிஞ்சா செய்யுறோம்.

சுஜப் : ஏது பணம்...? வாப்பாட்டத்தான் வாங்கினியா?

பாயிஸ் : ஒரு வழியில வந்துது.

சுஜப் : (எழுந்து) சரி... நான் போயிட்டு வாரன்...

பாயிஸ் : இரு... இரு... உம்மா தேத்தண்ணி கொண்டு வருவா. குடிச்சிட்டு போகலாம்...

சுஜப் : ஓ... மறந்து போயிட்டேன்.

*அப்பொழுது ரைஹானா இரு கிளாஸ்களில் தேநீர் கொண்டு வருகிறாள். சுஜபும் பாயிஸும் எடுத்துப் பருகுகின்றனர்.*

## காட்சி 20

இடம் : கோபியின் வீடு.

பாத்திரங்கள் : கோபி, தர்மராசா, சரோஜா, (காட்சி 4 இல் வந்த) துஷ்யந்தன்.

களம் : உட்புறம்.

*தர்மராசா உடை அணிந்து, தளவாடியின் முன் நின்று தலை வாரிய பின், முன் ஹோலுக்கு வருகின்றார். வந்து ஒரு மேசையின் முன் செல்பவரின் முகம் வெளிறுகின்றது.*

தர்மாரசா : (பதற்றமாக) சரோ... இங்க வாரும்...

*சரோஜா வருகின்றாள்.*

தர்மராசா : இங்க மேசையில வச்சிருந்த பத்தாயிரம் ரூபாய எடுத்தனீரோ?

சரோஜா : இல்லையேப்பா.

தர்மராசா : அப்ப... கோபி எடுத்திருப்பானோ... கோபி! கோபி!

*கோபி வருகின்றான்.*

தர்மராசா : இங்க மேசையில வச்சிருந்த காச எடுத்தனீரோ?

கோபி : இல்லப்பா!

சரோஜா : அப்ப எப்படிக் காணாமல் போகும். நீங்கதான் மறந்து போய் வேற எங்கயும் வச்சிருப்பீங்கள்.

தர்மராசா : இல்லப்பா... ஒரு கவரில போட்டு ராமநாதன் என்டு பெயரெழுதி உதில தானப்பா வச்சனான்.

கோபி : வச்சு எவ்வளவு நேரமப்பா இருக்கும்?

தர்மராசா : ஒரு மணித்தியாலத்துக்குள்ள தான் இருக்கும். அதுக்குள்ள யார் வந்து கொண்டு போயிருப்பினம்?

கோபி : கதவும் திறந்திருக்கு...

சரோஜா : நீங்க என்னத்துக்கப்பா உதில வச்சனீங்கள்?

தாமராசா : கொண்டு போய்க் கொடுத்திட்டு வருவோம்னு புறப்படும் போதுதான் பேப்பர்காரன் வந்தவன். பிறகு பேப்பரப் பார்த்திட்டுப் போவோமென்டு உதிலயே வச்சிட்டேன்.

*அப்பொழுது அங்கே கோபியின் நண்பன் துஷ்யந்தன் வருகின்றான். தர்மராசாவும் சரோஜாவும் உள்ளே செல்கிறார்கள்.*

துஷ்யந்தன்: (கோபியின் முகத்தைப் பார்த்து) என்ன கோபி... ஏதாவது புரப்ளமா?

கோபி : ஒண்ணுமில்ல துஷி.

துஷ்யந்தன்: என்ன கோபி... முகத்திலே ஏதோ கவல தெரியுது. எனக்கு நீர் மறைக்கிறீரே...

கோபி : பத்தாயிரம் ரூபா பணம் காணாமல் போயிட்டுது துஷி.

துஷ்யந்தன்: ஐஸீ... எங்க வச்சு காணாமல் போயிட்டுது?

கோபி : அப்பா உந்த மேசையிலதான் வச்சிட்டு உள்ள போயிருக்கிறார். இப்ப வந்து பார்க்க காணேல்ல.

துஷ்யந்தன்: காலையில யாராவது வந்தவையோ?

கோபி : ஒருத்தரும் வரேல்ல.

துஷ்யந்தன்: உம்மட பிரண்ட்ஸ் மாரும் வரேல்லயா?

கோபி : ம்ஹூம்... பாயிஸ் தான் வந்திட்டுப் போனான். வேற சந்தேகமான யாரும் வரேல்ல துஷி.

துஷ்யந்தன்: (யோசனையோடு) பாயிஸ் எப்படி மச்சான்...?

கோபி : என்ன துஷி நீ... பாயிஸப்போய் சந்தேகப் படறியே. உந்தப் பத்தாயிரம் ரூபாய்க்காகப் போய் அவன சந்தேகப் படலாமா? மாத்துக் குறையாத தங்கம் துஷி, அவன்.

## காட்சி 21

இடம் : வீதி.
பாத்திரங்கள் : கோபி, சுஜப்.
களம் : வெளிப்புறம்.

*கோபி சைக்கிளிலே செல்லும் பொழுது தூரத்தில் சுஜப் சைக்கிளில் செல்வதைக் காணுகின்றான். வேகமாகச் சென்று அவனுக்கு அருகில் செல்கின்றான்.*

கோபி : எங்க போறனீர் சுஜப்?

சுஜப் : லைப்ரரிக்குப் போறேன்.

கோபி : நாச்சிமார் கோவிலடிக்குத்தானே.

சுஜப் : ஓம். நீர்...?

கோபி : நானும் அங்கதான் பேறனான். அதுசரி... போன கிழம நீர் காசு கொஞ்சம் அவசரமாத் தேவைப் படுறதாச் சொன்னீரல்லோ. கிடைச்சுதோ?

சுஜப் : ஓம். கிடைச்சுது. பாயிஸ்... (சமாளித்தவாறு) மச்சான் ஒருத்தன் தந்தவன்.

கோபி : வாருமன்... இந்த ஹோட்டலுக்குப் போயிட்டுப் போகலாம்.

*இருவரும் ஹோட்டல் வாசலில் சைக்கிள்களை நிறுத்திப் பூட்டியவாறு உள்ளே செல்கின்றனர்.*

*அவர்கள் இருவரும் ஓர் இடத்தில் சென்று அமர்ந்ததும், அருகில் பணியாளன் வருகின்றான்.*

கோபி : ஸோார்ட் ஈட்ஸ் கொண்டு வாங்கோ...

*பணியாளன் சென்றுவிடுகின்றான்.*

சுஜப் : எப்படி உம்மட கொழும்பு பிரயாணமெல்லாம்?

கோபி : ரொம்ப மகிழ்ச்சியாக் கழிஞ்சுது.

*பணியாளன் ஷோர்ட் ஈட்ஸ் கொண்டு வந்து வைக்கின்றான். கோபியும் சுஜபும் எடுத்துச் சாப்பிடுகின்றனர்.*

சுஜப் : பழையபடி பெரும் பிரச்சின ஒன்டு வரும் போலயிருக்கு.

கோபி : அதான் எல்லோருக்கும் பயமா இருக்கு. கொஞ்சக் காலம் நிம்மதியா இருந்தனாங்க. அதுவும் இல்லாமப் போயிடும் போல இருக்கு.

சுஜப் : பிரச்சின கூடினா வேற எங்கயும் போற ஐடியா இருக்கோ?

கோபி : எங்க போறது? வேற எங்கயும் போற ஐடியா இல்ல. என்னதான் பிரச்சினயா இருந்தாலும் சொந்த இடத்தில வாழுற மாதிரி வருமோ?

சுஜப் : அதுவும் சரிதான்.

*பணியாளன் மீண்டும் வருகின்றான்.*

ஸேவர் : கூல்டிரிங்ஸ்...? டீ, பிளேன்டீ...?

கோபி : ரெண்டு பென்டா படி கொண்டு வாங்க.

*பணியாளன் செல்கின்றான்.*

கோபி : போன முற பிரச்சினயுக்குள்ள நீங்க எங்கயாவது போனனீங்களோ?

சுஜப் : ஓம். புத்தளத்துக்குப் போனோம்.

கோபி : நாங்க பாயிஸ் குடும்பமெல்லாம் ஒரு இடத்துக்கும் போகேல.

சுஜப் : கரண்ட்டுமில்லாம, பயங்கரச்செல் அடிக்குள்ள எப்படி இருந்தனீங்கள?

*பணியாளன் கொண்டு வந்து கூல் டிரிங்ஸை வைத்துச் செல்கின்றான்.*

கோபி : கஷ்டமான வாழ்க்கைதான். ஆனா திரில்லிங் கலந்த சந்தோஷமான வாழ்க்கை என்டுதான் சொல்ல வேணும்.

*கோபி ஒரு பென்டாவை எடுத்து சுஜபிடம் கொடுத்து விட்டு, தான் மற்றதை எடுக்கின்றான்.*

சுஜப் : இந்த முற நாங்களும் போறயில்ல என்டுதான் நினைக்கிறம். பார்ப்போம். ஆனா, ஒரு பிரச்சினயும் வராம ஆண்டவன் காப்பாத்த வேணும்.

*பணியாளன் பில்லைக் கொண்டு வந்து வைக்கின்றான். சுஜப் காசு கொடுக்கப் போக, அதைத் தடுத்து தான் கொடுக்கின்றான் கோபி. பணியாளன் மிச்சப் பணத்தைக் கொண்டு வந்து வைக்க, டிப்ஸ் வைத்து விட்டு, இருவரும் வெளியேறுகின்றார்கள்.*

*சைக்கிள்களை எடுக்கும் இருவரும் ஒன்றாகச் செல்கின்றார்கள்.*

## காட்சி 22

இடம் : பாயிஸின் வீடு.
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ்.
களம் : உட்புறம்.

*கோபி ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு. பாயிஸின் வீட்டுக்குச் செல்கின்றான். பாயிஸ் முன் ஹோலிலிருந்து ஏதோ எழுதிக் கொண்டிருப்பவன் கோபியை வரவேற்கின்றான்.*

கோபி : காலையில நீங்க யாருமே வீட்டில இல்லையே. போஸ்ட் மேன் பெல் அடி அடியென்டு அடிச்சவன். நீங்க யாரும் வரயில்ல. பிறகு நான் வாங்கி வச்சனான். (கடிதத்தை நீட்டுகின்றான்)

பாயிஸ் : (கடிதத்தை வாங்கியவாறு) சொந்தக்காரரொருவர் மௌத்தாப் போயிட்டார். அங்க போனோம். (கடிதத்தைப் பார்க்கின்றான்) வாப்பாக்கு வந்திருக்கு. குடுத்திட்டு வாரன்.

*பாயிஸ் உள்ளுக்குச் செல்கின்றான். கோபி தான் அமர்ந்திருக்கும் ஆசனத்துக்கு அருகில் கிடக்கும் கசக்கப் பட்ட கவர் உன்றை எடுத்து குப்பைக் கூடைக்குள் வீச முனைகின்றான். அப்பொழுது திடீரென்று கவரில் எழுதப்பட்ட எழுத்து அவனைக் கவர்கின்றது. யோசனையோடு விரித்துப் பார்க்கின்றான். அதில் 'ராமநாதன் ரூ 10000/=' என்று எழுதப்பட்டிருக்கின்றது. அதைப் பார்த்ததும் அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருக்கின்றது. இவ்வேளையில் இரு பின்னோக்கிய சம்பவங்கள் அவனுக்கு ஞாபகம் வருகின்றன.*

*காட்சி 20 இல் தர்மராசா கூறுவது.*

தர்மராசா : இல்லப்பா... ஒரு கவரில போட்டு ராமநாதன் என்டு பெயரெழுதி உதில தானப்பா வச்சனான்.

காட்சி 21 இல் கோபியும் சுஜபும் கதைப்பது.

கோபி : போன கிழம நீர் காசு கொஞ்சம் அவசரமாத் தேவைப்படுறதாச் சொன்னீரல்லோ, கிடைச்சுதோ?

சுஜப் : ஓம். கிடைச்சுது. பாயிஸ்... (சமாளித்தவாறு) மச்சான் ஒருத்தன் தந்தவன்.

*(பின்னோக்கிய காட்சிகள் முடிவு) கோபி சிந்திக்ன்றான்.*

கோபி : (தனக்குள்) சுஜப், பாயிஸ் என்டு ஏதோ சொல்ல வந்தவன் ஏன் கதைய மாத்தியவன்? ம்ஹூம்... சந்தேகப்படக் கூடாது. எதுக்கும் பாயிஸையே கேட்டிடுவோம்.

*பாயிஸ் உள்ளுக்கிருந்து வருகின்றான்.*

பாயிஸ் : (ஆசனத்தில் அமர்ந்தவாறு) அது வாப்பாட கூட்டாளியொருத்தர் எழுதின கடிதம். (கோபியின் முகத்தைப் பார்த்து) என்ன கோபி... ஏன் ஒரு மாதிரியா இருக்கே...?

கோபி : பாயிஸ்... நீ சுஜபுக்கு காசு ஏதாவது கொடுத்தனியோ?

பாயிஸ் : (தடுமாற்றத்துடன்) இல்லையே.... ஏன் கேக்கிறே...?

கோபி : சும்மாதான்.

*சிறிது நேரம் மௌனம்.*

கோபி : உந்தக் கவர் இங்க கிடந்துது பாயிஸ்... உந்தக் கவரிலயுள்ள எழுத்து யாரோடன்னு தெரியுமா?

பாயிஸ் : (கவரை நன்றாகப் பார்த்து) இது உன்னோட அப்பாட எழுத்து மாதிரியிருக்கே. இது எப்படி இங்க வந்துது? நானென்டா இப்பதான் பார்க்கிறேன்.

கோபி : (குழப்பத்துடன்) உந்தக் கவர எடுத்துப் போறன் பாயிஸ். எனக்கு சரியா தலையிடிக்குது. நான் உன்ன பிறகு சந்திக்கிறன்.

*கோபி குழப்பத்துடன் வெளியேறுகின்றான். பாயிஸ் சிந்திக்கின்றான்.*

பாயிஸ் : (தனக்குள்) சுஜபுக்கு காசு கொடுத்த விஷயம் கோபிக்கு எப்படித் தெரியும்? சுஜப் சொல்லியிருப்பானோ? உடனே சுஜபச் சந்திச்சுக் கேக்க வேணும்.

## காட்சி 23

**இடம்** : கோபியின் வீடு.
**பாத்திரங்கள்** : தர்மராசா, கோபி, பாயிஸ்.
**களம்** : உட்புறம்.

*தர்மராசா முன் ஹோலிலிருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவரருகில் செல்கின்றான் கோபி.*

**கோபி** : (மெதுவாக) அப்பா...

*தர்மராசா நிமிர்கிறார்.*

**தர்மரதசா** : என்ன கோபி...?

**கோபி** : (கசங்கிய கவரை நீட்டி) உதுக்குள்ளதானே அப்பா ராமநாதன் அங்கிளுக்குக் குடுக்க வேண்டிய காச வச்சிருந்தனீங்கள்?

**தர்மராசா** : (அவசரமாக அதை வாங்கி) உது உனக்கு எப்படிக் கிடைச்சுது... உதுக்குள்ளதான் காசு இருந்துது.

**கோபி** : (சமாளித்தவாறு) எங்கட வாசல்ல தான் கிடந்துதப்பா.

**தர்மராசா** : எங்கட வாசல்லயோ?

**கோபி** : ஓமப்பா. யாரோ களவெடுத்துப்போட்டு, காச எடுத்துக் கொண்டு கசக்கி எறிஞ்சிருக்காங்க.

**தர்மராசா** : அப்படித்தான் இருக்க வேணும். வரவர கள்ளன்கள் கூடிக்கொண்டு போறான்கள்.

*கோபி அங்கிருந்து புறப்பட்டுத் தன்னறைக்குள் செல்கின்றான். கட்டிலில், இரு கைகளாலும் தலையைப் பிடித்தவாறு அமர்கின்றான்.*

*வானொலியில் பாட்டு ஒலிக்கின்றது. "யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்..."*

*எழுந்து சென்று வானொலியை நிறுத்திவிட்டு, மீண்டும் கட்டிலில் அமர்கின்றான். மீண்டும் இரு கைகளாலும்*

*தலையைப் பிடிக்கின்றான். அவன் முகம் அதிக கவலையையும் குழப்பத்தையும் பிரதிபலிக்கின்றது.*

*அப்பொழுது அங்கே பாயிஸ் வருகின்றான். அவன் கையில் ஒரு புத்தகம் இருக்கின்றது.*

பாயிஸ் : என்ன கோபி பெரும் யோசன...?

*கோபிக்கு அருகில் அமர்கின்றான் பாயிஸ். கோபி நிமிர்ந்து பார்க்கின்றான். பின்பு தலையைத் திருப்பிக் கொள்கின்றான்.*

பாயிஸ் : தமிழ்வாணன்ட நாவல் ஒண்டு எடுத்துக் கொண்டு வந்தன் மச்சான். ரொம்ப விறுவிறுப்பா இருக்கு. நீ விரும்பிப் படிப்பாயென்டு கொண்டு வந்தன்.

*பாயிஸ் கோபியிடம் புத்தகத்தை நீட்டுகின்றான். ஆனால் கோபி அதை வாங்கவில்லை.*

பாயிஸ் : என்ன கோபி.. . என்ன நடந்துது...? அப்படி என்ன யோசன என்டு சொல்லு.

*கோபி மௌனமாக இருகிறான்.*

பாயிஸ் : என்ன பிரச்சினையென்டு சொல்லு மச்சான்.

கோபி : (கோபமாக) நீதானடா பிரச்சின.

பாயிஸ் : (அதிர்ச்சியுடன்) நானா? என்ன கோபி சொல்றே?

*கோபி மௌனமாக இருக்கிறான்.*

பாயிஸ் : கோபி... பிளீஸ்... என்னென்டு சொல்லு.

கோபி : (கோபமாக) செய்யிறதையும் செஞ்சு போட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்கிறனியா?

பாயிஸ் : என்ன செஞ்சன்...? என்ன நடிப்பு...? புதிர் போடாம என்னென்டு சொல்லு கோபி!

கோபி : நான் உன்மேல எவ்வளவு மதிப்பு வைச்சிருந்தனான். சீ..... எல்லாத்தையும் தவிடு பொடியாக்கிட்டியே.

பாயிஸ் : விஷயத்தச் சொல்லு மச்சான்.

கோபி : (கோபமாக) என்னோட இனிமேல் கதைக்காத பாயிஸ்... பத்தாயிரம் ரூபாய களவெடுத்ததும் மட்டுமில்லாம நல்ல மனுசனுக்கா நடிக்கிறே?

பாயிஸ் : என்ன! என்ன! பத்தாயிரம் ரூபா் களவு போய்ட்டுதா! நான் எடுத்தனா!

கோபி : இனியும் உன்னோட பசப்பு வார்த்தைகளக் கேக்க நான் ஒண்ணும் மடையனில்ல. மரியாதயா வெளியே போயிடு.

பாயிஸ் : கோபி! என்ன இதெல்லாம்!

கோபி : பிளீஸ் கெட் அவுட்..

பாயிஸ் : கோபி....

கோபி : பிளீஸ் கெட் அவுட்....

பாயிஸ் : கோபி... நீ என் மேல....

கோபி : (கோபமாக) பிளீஸ் கெட் அவுட்....

*பாயிஸ் கவலையோடு எழுந்து வெளியே வருகின்றான். தர்மராசா பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தவர் பாயிஸைப் பார்க்கிறார்.*

தர்மராசா : என்ன பாயிஸ்... ஏதோ சத்தம் கேட்டுது...?

பாயிஸ் : ஆங்... (சமாளித்து) ஒரு டிராமா ரிஹர்ஸல் அங்கிள்...

*பாயிஸ் வெளியேறுகின்றான்.*

## காட்சி 24
### (இது ஒரு குறுங்காட்சி)

இடம் : கல்வி நிலையம்
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ், (முன்பு காட்சி 17 இல் வந்த சிவா ஆசிரியர்.

*கோபியும் சிவா ஆசிரியரும் அமர்ந்திருக்கின்றார்கள். அப்பொழுது அங்கே வருகின்றான் பாயிஸ்.*

ஆசிரியர் : (பாயிஸைப் பார்த்து) அடுத்த பாடம் உங்கட தானா?

பாயிஸ் : ஓம்.

*பாயிஸ் கோபியைப் பார்க்கின்றான் அவன் பாயிஸைக் கண்டுகொள்ளவே இல்லை. பாயிஸ் அருகிலிருக்கும் ஒரு வாங்கில் அமர்ந்து தான் கொண்டு வந்திருக்கும் அச்சிட்ட பாடக்குறிப்புக்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றான்.*

கோபி : (ஆசிரியரிடம்) போன கிளாஸில நீர் கம்பர்கூறும் செய்ந்நன்றியோட சிறப்பப்பத்தி படிப்பிச்சனீரல்லோ? அதப்பத்திக் கொஞ்சம் சொல்லுமன்.

ஆசிரியர் : ஏன்... நீரும் ஓ. எல் எடுக்கப் போறனீயோ? (சிரித்தவாறு) 'அப்பா அம்மாவைக் கொன்ற பாவத்தையும் மன்னிக்கலாம். ஆசிரியரை, குழந்தையை, பெண்ணை, பசுவைக் கொன்ற பாவங்களையும் மன்னிக்கலாம். ஆனால் செய்த நன்றியை மறந்தவனுக்கு மன்னிப்பே இல்லை' என்று கூறுறார் கம்பர்.

கோபி : (கேலியாக) நல்லவன் மாதிரி நடிக்கும் கயவனுக்கு மன்னிப்பு இருக்கா சிவா?

*அதைக் கேட்டதும் பாயிஸ"க்கு, கோபி கன்னத்தில் அடித்ததைப் போல இருக்கின்றது.*

## காட்சி 25

இடம் : பாயிஸின் வீடு:.
பாத்திரங்கள் : பாயிஸ், அப்துல்ரஸாக், ரைஹானா,
களம் : உட்புறம்

*பாயிஸ் தூங்கிக் கொண்டிருக்கிறான். அப்பொழுது ஷெல் வெடிக்கும் சத்தங்கள் கேட்கின்றன. பாயிஸ் கண்விழித்து எழுந்து, முன் ஹோலுக்கு வருகின்றான். அங்கே உம்மாவும், வாப்பாவும் அமர்ந்திருக்கின்றார்கள்.*

*தொடர்ந்தும் ஷெல் வெடிக்கும் சத்தங்கள் கேட்கின்றன.*

ரஸாக் : (மகனைப் பார்த்து) என்ன பாயிஸ் ... எழும்பீட்டியோ?

பாயிஸ் : ம்............... மிச்ச நேரமாவா சத்தம் கேக்குது.?

ரைஹானா : சுபுஹு"க்கு பாங்கு சொல்றத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னால இருந்து கேக்குது.

அப்பொழுது வெகு அருகாமையில் ஷெல் ஒன்று வந்து, விழுந்து, *வெடிக்கும் சத்தம் கேட்கின்றது.*

ரைஹானா : யா அல்லாஹ்.......... யாரிட உயிரக் கொண்டு போயிட்டதோ....

ரஸாக் : அல்லாதான் நம்மளக் காப்பாத்த வேணும்.

[Sinhala library stamp] 5000 ... 17.

பாயிஸ் : (மணியைப் பார்த்து) ஓ.... ஐந்து அம்பதாச்சு. நான் சுபுஹுத்தொழுதிட்டு வாரன்.

ரைஹானா : வீட்டில தொழன் பாயிஸ்

பாயிஸ் : அல்லா இருக்கிறான்மா.

பாயிஸ் உள்ளே சென்று அவசர அவசரமாக பல் துலக்கி, முகம் *கழுவி, உடை அணிந்து வெளியேறுகின்றான்.*

*அவன் போகும் போது மணி ஆறு.*

*சுவர்க்கடிகாரத்தில் மணி ஆறிலிருந்து ஆறரையாகிறது: பாயிஸ் வருகின்றான். அவன் முகம் கவலையுடன் காட்சியளிக்கின்றது.*

*பாயிஸ் : காலம்பற ஷெல்லடியில வேலுப்பிள்ள மாஸ்டர்* செத்துப் போயிட்டாராம்

ரசாக், ரைஹானா : என்ன!

பாயிஸ் : பக்கத்தில ஷெல் விழுந்து வெடிச்ச சத்தம் கேட்டதல்லவா? அது மாஸ்டர் வீட்டில தான் விழுந்து வெடிச்சிருக்கு. வீட்டாக்களுக்கெல்லாம் காயமாம்.ஆஸ்பத்திரியில
அட்மிட் பண்ணியிருக்கிறாங்கலாம்.

ரசாக் : எப்படிப்பட்ட மனுசன் அவர்.........? எல்லாருக்கும் உதவி செய்யோணுமென்டே வாழ்ந்தவர். இப்ப பொசுக் கொண்டு சேர்ந்திட்டார். பின்னேரம், நாளைக்கு அடிக்கிற குண்டில,ஷெல்லடியில யார்யாரோ?

ரைஹானா : நான் கோபியோட அம்மாவோட சேர்ந்து பிறகு போறன். நீ இப்ப ஒருக்கா போயிட்டு வா.

*பாயிஸ் வெளியேறுகின்றான்*

## காட்சி 26.

இடம் : கோபியின் வீடு.
பாத்திரங்கள் : கோபி, துஷ்யந்தன், சரோஜா.
களம் : உட்புறம்.

கோபியும், துஷ்யந்தனும் கெசட் ரெகோர்டரில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

*"உன்ன நெனச்சேன் ...... பாட்டுப்*
*படிச்சேன்.......... தங்கமே..........*
*ஞானத்தங்கமே..........*
*என்ன நெனச்சேன்......... நானும்*
*சிரிச்சேன்........... தங்கமே..........*
*ஞானத்தங்கமே..........*

*அந்த வானம் அழுதாத்தான்..............*
*இந்த பூமியே சிரிக்கும்....................*
*வானம் போல் சில பேர்.........*
*சொந்த வாழ்க்கையும் இருக்கும்..............*
*உணர்ந்தேன் நான்.............*
*உன்ன நெனச்சேன்.....................*

*பாடல் திடீரென்று நிற்கின்றது.*
*கோபி அருகில் சென்று பார்க்கிறான்.*

கோபி : துஷி. . . . கரண்ட் போயிடுச்சு
துஷி : (கவலையோட) அப்ப இனி அவ்வளவு தான். இனி சண்ட முடியுமட்டும் வராது.
கோபி : என்ன சொல்றனீர்!

துஷ்யந்தன் : ரெண்டொரு நாளைக்குள்ள கரண்ட் இல்லாமப் போகுமெண்டு அப்பா சொல்லிக் கொண்டிருந்தவர். இப்ப இல்லாமப் போயிடுச்சு. இனி வாரது சந்தேகந்தான்.

கோபி : இனி பழையபடி ஜேம் போத்தல் விளக்குத்தானே?

துஷ்யந்தன் : அது மட்டுமல்ல. . . . வேற என்னெல்லாம் புதுசுபுதுசா கண்டு பிடிப்பாங்களோ தெரியல்ல. ஒரு வழி அடைக்கப்பட்டா பல வழியத் தேடிச் செல்றது வழக்கம் தானே.

கோபி : அப்ப கரண்ட் இல்லாமப் போறதும் ஒருவழியில நல்லதுதானென்டு சொல்லு.

*இருவரும் சிரிக்கின்றார்கள்.*

துஷ்யந்தன் : இனி பெற்றோல், டீசலெல்லாம் இல்லாமப் போகும்.காரெல்லாம் மண்ணண்ணெய்யில ஓடும். வேற இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்றவைக்கு உந்த அதிசயமான காட்சிகளயெல்லாம் பார்க்க முடியாது.

*மீண்டும் சிரிப்பு.*

*அப்பொழுது சரோஜா கழுவிக் காய்ந்த ஆடைகளை எடுத்து வருகின்றாள்.*

துஷ்யந்தன் : இனி உடுப்பெல்லாம்நல்லபளிச் சென்டும் மணத்தோடயும் இருக்கும்.

| | |
|---|---|
| சரோஜா | : ஏன் துஷி அப்படிச் சொல்றீர்? |
| துஷ்யந்தன் | : சவர்க்காரமெல்லாம் இல்லாமல் போயிடும். போன முறைய மாதிரி பனம் பாணியத் தேச்சுத்தான் உடுப்புக்களக் கழுவ வேணும். அதனாலதான் அப்படிச் சொன்னனான். |
| சரோஜா | : என்னமோப்பா............... என்னதான் பிரச்சினவந்தாலும் வேற இடத்துக்கு மட்டும் போறதில்லையென்டு அவர் சொல்லிப் போட்டார். |
| துஷ்யந்தன் | : வவுனியா, கொழும்பென்டு போறவைக்கு இங்கிலிஸ் படங்களிலயும் வராத சண்டைக் காட்சிகளயும், போர் விமானங்களயும் நேரில பார்க்க முடியுமா? |

மூவரும் சிரிக்கின்றார்கள்.

## காட்சி 27

இடம் : கூட்டறவுச் சங்கம், வீதி.
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ், துஷ்யந்தன், கூட்டுறவுக் கடை முகாமையாளர், இன்னும் பலர்.
களம் : வெளிப்புறம்.

*கூட்டுறவுச் சங்கத்தின் முன்னால், பெருங்கூட்டம் நிற்கின்றது. வரிசையின் ஆரம்பத்திலிருந்து ஐம்பது, அறுபது ஆட்களுக்குப் பிறகு கோபி நிற்கின்றான். அவனுக்குப் பின்னால் துஷ்யந்தனும், பாயிஸும் நிற்கின்றார்கள். ஒவ்வொருவரின் கைகளிலும் பைகள்.*

*அப்பொழுது ஒருவர் சாமான்களை வாங்கிக் கொண்டு வெளியே செல்கின்றார்.*

பாயிஸ் : இப்பதான் ஒருவர் வெளியால போறார். (கைக்கடிகாரத்தைப் பார்த்து) பத்து மணி. . . நம்மட டேர்ன் வாரத்துக்குள்ள பன்னிரெண்டு மணியாயிடும்.

துஷ்யந்தன் : சில நேரம் லஞ்ச் டைமாப் போயிட்டா வீட்ட போயிட்டு, பழையபடி வரவேண்டியிருக்கும்.

*இவர்கள் இருவரின் உரையாடல்களிலும் கலந்து கொள்ளாது மௌனமாக நிற்கின்றான் கோபி.*

*சிறிது நேரம் மௌனமாகக் கழிக்கின்றது.*

*ஓர் இளைஞன் பெரிய சாக்கிலே வைத்துக் கட்டிய சாமான்களை, சைக்கிளின் பின் கரியரிலே வைத்து ஒரு கையால் பிடித்தவாறு ஓட்டிச் செல்கின்றான்.*

**கோபி** : (அவனைச் சுட்டிக் காட்டி) அங்கபாரும் துஷி. அவன் எவ்வளவு லேசா சைக்கிள ஓடிச் செல்றான். இவ்வளவு பாரத்த பின்னால வச்சு எங்களால ஓடிச் செல்ல முடியாது.

**துஷ்யந்தன்** : நாங்க படிப்பு படிப்பெண்டு இருந்திட்டோம். எங்களால இப்படிப்பட்ட வேலைகளயெல்லாம் செய்யிறது கஷ்டந்தான்.

**கோபி** : இப்ப படிப்பும் போச்சுது

**துஷ்யந்தன்** : பிரச்சின தொடங்கியிருக்காட்டா இப்பெல்லாம் கெம்பஸ்தொடங்கியிருக்கும் இல்லயா?

**கோபி** : (கவலையோடு) ப்ச். . . .

*இவர்களின் உரையாடலில் கலந்துகொள்லாமல், மௌனமாக நிற்கின்றான் பாயிஸ்.*

*அப்பொழுது எங்கோ, வேட்டுச்சத்தங்கள் கேட்கின்றன. அதனைத் தொடர்ந்து ஷெல்கள் வெடிக்கும் சத்தங்கள் கேட்கின்றன. வானத்தில், போர் விமானங்கள் பறக்கும் சத்தங்களும் கேட்கின்றன.*

*கூட்டுறவுக் கடை வாசலில் நிற்பவர்கள், பயத்தோடு தம்தம் வீடுகளை நோக்கி விரைகின்றார்கள். கூட்டுறவுக்கடை முகாமையாளர் கதவைப் பூட்டியபின், சைக்கிளிலே பறக்கின்றார்.*

## காட்சி 28

இடம் : கோபியின் வீடு.
பாத்திரங்கள் : கோபி, தர்மராசா, சரோஜா.
களம் : உட்புறம்.

*தர்மராசாவும் சரோஜாவும் முன் ஹோலிலிருந்து கதைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது வெளியிலிருந்து கோபி வருகின்றான்.*

தர்மராசா : கொஞ்ச முதல் ஹெலியெல்லாம் சுத்திக் குண்டு போட்டுக்கொண்டிருந்ததல்லோ, எங்க போய்ட்டு வாரனீர்?

கோபி : விளையாடப் போனனான். இடையில, ஹெலியும் பொம்பரும் வந்திட்டுது. துஷியோட வீட்டில இருந்திட்டு வாரனான்.

தர்மராசா : இன்டைக்கு எங்க குண்டு விழுந்துதோ?

கோபி : பிரப்பங்குள்ம் வீதியில குண்டு விழுந்து, அஞ்சு பேர் செத்துப் போயிட்டினம். இருவது பேருக்கு மேல காயம்.

சரோஜா : ஐயோ! ஒவ்வொரு நாளும் அஞ்சோ பத்தோ போய்க்கொண்டுதான் இருக்கு.

கோபி : இப்பெல்லாம் எமன் ஹெலியிலயும் அவ்ரோவிலயும் தான் வாரான் அம்மா. ஆனாலும் எங்க சனங்கள் துணிஞ்ச சனங்கதான். அவன் என்ன அடி அடிச்சாலும் வானத்த அண்ணாந்து பார்க்கிற சனங்களுக்குக் குறைச்சலில்லையனை.

தர்மராசா : நேத்து வேலுப்பிள்ளை மாஸ்டர்ட மோனப் பார்த்தனான். கலியாணங் கட்டின சந்தோஷம் கூட இல்லாம உம்மென்டு இருக்கிறாள்.

சரோஜா : பின்ன, இருக்காதோ...? கலியாணங் கட்டி ஒரு கிழமையில அப்பா செத்துப்போனா, அதுவும் குத்துக்கல்லாட்டம் இருந்தவர் குண்டடிபட்டு செத்துப்போனா கவலையா இராதோ?

கோபி : (கடிகாரத்தைப் பார்த்து) மணி ஆறாச்சுது. சொலமன சந்திக்க வாரதாச் சொல்லியிருந்தன். ஒருக்கா போட்டு வாரன்.

சரோஜா : கவனம் கோபி. பிரச்சினயான நேரத்தில இரவில அங்க இங்க போறது நல்லதில்ல. கெதியா வரப்பார்.

*கோபி தலையசைத்தவாறு வெளியேறுகிறான்.*

தர்மராசா : அவனும் பாவம் முந்தியென்டா லைப்ரரிக்குப் போறவன். டியூட்டரிக்குப் போறவன். இப்பதான் ஒண்டும் இல்லையே. எவ்வளவு நேரந்தான் வீட்டுக்குள்ளயே இருக்கிறது?

சரோஜா : அதுசரி. கொஞ்சநாளா எனக்கொரு சந்தேகம்.

தர்மராசா : என்ன சந்தேகம்?

சரோஜா : இப்ப கொஞ்சநாளா பாயிஸ் இங்க வாரதில்ல. இவனும் அவங்க வீட்டுப்பக்கம் போறதாக்காணோம். ரெண்டு பேருக்குள்ளயும் ஏதேனும் பிரச்சினயா இருக்குமோ?

தர்மராசா : நானும் அப்படித்தான் நினைக்கிறன். நீர் அவசரப்பட்டு கோபிக்கிட்ட ஏதேனும் கேட்டுப் போடாதீரும். அவனா சொல்றவனோவென்டு பார்ப்போம். சொல்லாட்டா கேக்கலாம்.

## காட்சி 29

| | | |
|---|---|---|
| இடம் | : | கோபியின் வீடு, வீதி. |
| பாத்திரங்கள் | : | கோபி, சரோஜா, ரைஹானா |
| களம் | : | உட்புறம், வெளிப்புறம். |

*கோபி கட்டிலில் சாய்ந்தவாறு புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறான். அப்பொழுது உள்ளே வருகின்றாள் சரோஜா.*

சரோஜா : (மெதுவாக) கோபி....

கோபி : (புத்தகத்திலிருந்து தலையை உயர்த்தி) என்னம்மா...?

சரோஜா : களவு போன காசு கிடைச்சிடுச்சு.

கோபி : (திடீரென நிமிர்ந்து உட்கார்ந்து) என்ன!

சரோஜா : இன்டைக்கு காலைய்யில அம்பலம் ஆச்சி வந்தவ. கொஞ்ச நேரம் கதைச்சுக் கொண்டிருந்துவிட்டு காசு பத்தாயிரம் ரூபாய நீட்டுறா. என்னென்டு கேட்டா அன்டைக்கு எடுத்த காசென்டு சொல்றா. எனக்கென்டா அதிர்ச்சியா இருக்குது. அவசரமா கொழும்புக்குப் போக வேண்டி இருந்ததால காசு தேவைப்பட்டுச்சாம். எங்கட்ட கேட்டா கொடுக்கமாட்டோமென்டு நினைச்சு, வசதியாக் கிடைச்சோன எடுத்துக் கொண்டு போயிட்டா. ஆனா, மனுசி நேர்மையான மனுசியென்டு நான் சொல்லவேணும். இப்ப காசு கிடைச்சோன கொண்டு வந்து தந்திட்டா.

*இவ்வளவு விடயங்களையும் கண்கள் விரிய கேட்கின்றான் கோபி.*

கோபி : என்னம்மா சொல்றியள்? (தலையை இரு கைகளாலும் தாங்கி) எனக்கு ரொம்பவும் குழப்பமா இருக்கு.

சரோஜா : நான் சொல்றது உண்மைதான் கோபி. இப்பத்தான் அம்பலம் ஆச்சி வந்து காசத் தந்திட்டுப் போனவ.

கோபி : ஐயோ! அப்படியென்டா பாயிஸ் களவெடுக்கயில்லையா?

*கோபி பதறுகின்றான்.*

சரோஜா : என்ன! (அதிர்ச்சியுடன்) பாயிஸ் களவெடுத்தவனோ! உதென்ன பைத்தியக்காரக் கதை?

கோபி : (தனக்குள்) அப்படியென்டா பாயிஸோட வீட்டில கவர் கிடந்துதே.

சரோஜா : (புரியாமல்) என்ன கவர்...? என்ன விஷயம்...? சொல்லு கோபி.

*கோபி சரோஜாவிடம் அனைத்தையும் கூறுகின்றான். அதை அதிர்ச்சியுடன் கேட்கின்றாள் சரோஜா.*

சரோஜா : எங்க அந்தக் கவரக் கொண்டு வா பார்ப்போம்.

*தனது புத்தக மேசை லாச்சியைத் திறந்து அதற்குள் இருக்கும் கவரை எடுத்துக் கொடுக்கிறான் கோபி.*

*சரோஜா அதை வாங்கிப் புரட்டிப் பார்க்கின்றாள். முன்பக்கம், 'ராமநாதன் ரூ 10000/= என்று எழுதப்பட்டிருக்கின்றது. பின்பக்கம் திருப்பிப் பார்க்கின்றாள். அதில், 'கமலினி - 01/456456 என்று எழுதப்பட்டிருக்கின்றது.*

சரோஜா : ஓ! இத நான்தான் ரைஹானாட்ட கொடுத்தனான்.

கோபி : (புரியாமல்) பாயிஸோட உம்மாட்ட கொடுத்தனீங்களோ? ஏன்?

சரோஜா : உன்னட கமலினி அன்ட்ரி அவவோட கிளாஸ்மேட். அன்ட்ரியோட டெலிபோன் நம்பர கேட்டவ. உந்தக் கவர் மேசையில கிடந்துது. உதில எழுதிக் கொடுத்தனான்.

கோபி : ஐயோ! நான் எல்லாத்தையும் தப்பா நினைச்சிட்டனே. (பரபரப்புடன்) நான் உடன பாயிஸிட்ட மன்னிப்புக் கேக்க வேணும்.

*கோபி பாயிஸின் வீட்டுக்கு ஓடுகின்றான். பாயிஸின் வீடு பூட்டியிருக்கின்றது. அழைப்பு மணியை அழுத்துகின்றான். ரைஹானா கதவைத் திறக்கின்றாள்.*

கோபி : அன்ட்ரி பாயிஸ் இருக்கிறானா?

ரைஹானா : பாயிஸ் சுஜப்பூட்டுக்குப் போனான் கோபி. உள்ள வாருமன்.

கோபி : நான் அங்க போய் சந்திக்கிறன்.

*கோபி தனது வீட்டுக்குச் சென்று, சைக்கிளை எடுத்து வந்து, வேகமாக மிதிக்கின்றான்.*

## காட்சி 30

இடம் : வீதி, சுஜபின் வீடு.
பாத்திரங்கள் : கோபி, பாயிஸ், சுஜப், (முன்பு காட்சி 12ல் வந்த) ரகுமான்.
களம் : வெளிப்புறம், உட்புறம்.

*சுஜபின் வீட்டிற்கு வேகமாக வந்து சேருகின்றான் கோபி. அவன் சைக்கிளை நிறுத்தி, பூட்டும் வேளையில் உள்ளிருந்து பேசும் வார்த்தைகள் கேட்கின்றன.*

சுஜப் : பாயிஸ் மட்டும் அந்த சந்தர்ப்பத்தில காசு தரயில்லயென்டு சொன்னா எனக்கு ரொம்ப கஷ்டமாயிருந்திருக்கும் ரகுமான்.

பாயிஸ் : நீ உண்மையில பாராட்ட வேண்டியது ரகுமானத்தான். ஏனென்டா அந்தக்காசத் தந்தது ரகுமான்தான்.

*இவ்வேளையில் கதவை மெதுவாகத் தட்டுகின்றான் கோபி. ஆனால் அது மற்ற மூவருக்கும் விளங்கவில்லை.*

சுஜப் : என்ன! ரகுமானா!

பாயிஸ் : ஓம் சுஜப். அந்த நேரத்தில நீங்க ரெண்டு பேரும் கதைக்காம இருந்தீங்க. அதனால தான்தந்ததாச் சொன்னா நீ வாங்கிக்கொள்ள மாட்டியென்டு சொல்லித்தான் என்னட்ட தந்துவிட்டான். அதோட, என்னதான் ரகுமான் உழைச்ச காசா இருந்தாலும் கடனாக் கொடுக்கிறத வீட்டில விரும்ப மாட்டாங்க என்டும் சொன்னான். அதனாலதான் இதப்பத்தி யாருகிட்டயும் சொல்லாதேன்டு நான் சொன்னன்.

*இவ்வேளையில் கோபி மீண்டும் தட்டுகின்றான் மூவரும் அப்பக்கம் பார்க்கின்றார்கள்.*

கோபி : எக்ஸ்கியூஸ்மி. (உள்ளே வந்து) பாயிஸ்... நீ என்ன மன்னிச்சுக்கொள்ள வேணும். (பாயிஸின் கைகளைப் பிடித்துக் கொண்டு) நான் உன்ன தேவையில்லாம சந்தேகிச்சிட்டன்.

பாயிஸ் : கோபி.....

*பாயிஸ் கோபியை அணைத்துக் கொள்கின்றான்.*

பாயிஸ் : கோபி... (அணைப்பிலிருந்து விலகி) நீரடிச்சு நீர் விலகுமா....? நமக்குள்ள என்ன மன்னிப்பெல்லாம்.

சுஜப் : உங்களுக்குள்ள என்ன பிரச்சின?

பாயிஸ் : ஒரு சின்ன பிரச்சின சுஜப். அதெல்லாம் இப்ப சரி. (கோபியைப் பார்த்து) உன்னட அப்பா அன்டைக்கு நீ சத்தமா கதைச்சப்ப, என்ன சத்தங்கேட்டுது என்டு கேட்டார். ஒரு டிராமா ரிஹர்ஸலென்டு பொய் சொல்லிப் போட்டன். அதுக்காக அவரிட்ட மன்னிப்புக் கேக்க வேணும்.

கோபி : என்னதான் இருந்தாலும் நான் செஞ்சது பிழை.

பாயிஸ் : உன்னட நிலையில நான் இருந்திருந்தால், நானும் அதத்தான் செஞ்சிருப்பன் கோபி. அது நடந்து முடிஞ்சுது. இனி அதப்பத்தி பேசுவானேன்?

கோபி : (பாயிஸை அணைத்து) பாயிஸ்..... பாயிஸ்....

கோபியின் வார்த்தைகள் அளவிடமுடியாத வாஞ்சையோடு வெளிவருகின்றன. இருவரும் நட்பின் அணைப்போடு, பாசப்பிணைப்பில் திளைத்திருப்பதைக் காணும் சுஜபின் கண்களிலும் ரகுமானின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் அரும்புகின்றன.

தொலைவில் எங்கோ ஷெல் அடிக்கும், வானிலே போர் விமானங்கள் பறக்கும் சத்தங்கள் முழங்குகின்றன.

## காட்சி 5 இல் வரும் வாழ்த்துரை.

இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தமைக்காக கோபி, பாயிஸ் ஆகியோருக்கும் அவர்களின் பெற்றோருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நிகழ்வு இந்நாட்டுக்கே முன்மாதிரியாக விளங்கக் கூடிய நிகழ்வாகும். இந்துக்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வரும் யாழ் மண்ணிலே இன ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில் இந்நிகழ்ச்சி இடம் பெறுவதையிட்டு நான் மிகவும் பெருமைப் படுகின்றேன். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் இவ்வாறு இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது இனப்பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமில்லாமலாகிவிடும். அப்படியொரு பொற்காலம் ஏற்பட இறைவன் அருள் புரியட்டும்.

வணக்கம்.

## காட்சி 5 இல் வரும் நன்றியுரை.

எங்களது அழைப்பை ஏற்று இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணக்கம்.

## காட்சி 5 இல் வரும் கவிதை.

*(இக்கவிதை இக்காலகட்டத்துக்குப் பொருத்தமில்லாததாகத் தோன்றினும் கதை நிகழும் காலகட்டத்துக்குப் பொருத்தமானதாக எழுதப்பட்டுள்ளது)*

### பசுபிக் சமுத்திரம் கடந்து....

வாருங்கள் தோழர்களே!
நாம் ஒரு
விருந்து கொடுப்போம்!

உலகிலுள்ள
அறிஞர்களை அழைத்து
காந்தி
பெர்னாட்ஸோ
போன்றோரை
பூமியிலிருந்து மீட்டு-
நாம் ஒரு
விருந்து கொடுப்போம்!

அவர்களுக்கு அமெரிக்க மாவும்
பிரெஞ்சு கறியும்
பிரிட்டன் நீரும்
கலந்து
சமைத்துக் கொடுத்து
உருசியை உணர்த்துவோம்!
தீயவனைத் தேடி
வீடியோ எடுத்து
அனைவருக்கும் காட்டுவோம்!
உலக நாடுகளைச்

சுரண்டித்
தின்னும்
ஏகாதிபத்தியர்கள்
எவர்கள் என
விளக்கிக் கூறுவோம்!

வியட்நாமியரின்
சுதந்திரத்தபால்
அவர்களின்
வீடுதேடி வர
துரித -
தபாற்சேவை அமைப்போம்!

சூறாவளி வீசிய
பங்களாதேஸ் மக்களுக்கு
புதிய தொரு
தென்றல் காற்று
அமைத்துக் கொடுப்போம்!

உயிர் மட்டுமே
எஞ்சியிருக்கும்
எதியோப்பியாவுக்கு
அன்பளிப்பாக
உடல்கள் பல
ஏற்றுமதிசெய்வோம்!

ரஷ்யா சென்று
சிறகு உடைந்த
சோஷலிஸ பறவைக்கு
தன்னியக்க
இறகுகள் பூட்டுவோம்!

தென்னாபிரிக்கர்களின்
கவலைக் கூளம்
அகற்றப்பட்ட
மகத்தானதொரு
மாநகரசபை நிறுவுவோம்!

பலஸ்தீனப் பொய்கையில்
படிந்திருக்கும்
இஸ்ரேலியப் பாசியைக்
கிளறி எறிவோம்!

குவைத் - ஈராக்
கொடிகளை எடுத்து
ஒற்றுமைப் பூக்களை
ஒட்டி விடுவோம்!

சோமாலியாவின்
சோகங்களுக்கு
அபலைத் திருமண
சாமரம் வீசுவோம்!

சீனா - பாகிஸ்தான்
அமெரிக்கா - பிரான்சு
பிரித்தானியா - ஜேர்மனி
பயணம் செய்து
பசுபிக் - ஆட்டிக்
சமுத்திரம் கடந்து
எவறெஸ்ற் - றொக்கி
மலைகளைத் தாண்டி
உலக மக்கள்
கூட்டமைப்பைக் கண்டு
ஒப்பந்தம் பேசி,
நல்லதொரு
ஐக்கியம் பேணுவோம்!



## எழுத்தாரைப் பற்றி.....

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கதைவாணன். இயற்பெயர் S.F.L. மொஹிடீன் ரஜா. தற்போது புத்தளத்தில் வசித்து வருகிறார்.

தனது பதினோராவது வயதில் எழுதத் தொடங்கியவர் இவர். ஒரு நீண்ட இடைவெளியின் பிறகு ஈழத்து இலக்கிய உலகு இவர் மூலம் 1992இல் சரித்திர நாவலைப் பெற்றது.

தேசிய ரீதியில் தனது திறமைகளைக் காட்டி வருபவர் இவர். பாடசாலைப் பருவத்திலேயே இந்தப் பயிர் முளைகாட்டத் தவறவில்லை. 1991இல் தேசிய தமிழ் மொழித்தின விழாவில் தங்கப்பதக்கம் பெற்றார்.

நாவல், நாடகம், கவிதை, சிறுவர் இலக்கியம் என்று பல்துறைகளில் எழுதி வரும் இவர், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவராவார்.

மாணவர் பயன் பெறும் வண்ணம் பல நூல்களை எழுதியுள்ள இவர், தற்போது புத்தளம் மாவட்டத்திலுள்ள விருதோடை அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்பித்து வருகின்றார். எனது ஆள்புலத்தின் கீழ் இத்தகைய ஒருவர் பணி புரிவது எனக்கு அளப்பரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது.

M.H.M.M. மஹ்ரூப் மரைக்கார்

கல்விப் பணிப்பாளர்

புத்தளம் வலயம்.



**"இளம் எழுத்தாளர்களுக்கு கைகொடுத்தல்" நிகழ்ச்சியின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.**

இளைஞர் சேவை அச்சகம்

ISBN 955-614-013-1